பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 03 வியாழக்கிழமை 17.06.2021 கதிர் 224

**இனிது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்து நடக்காமல் போன நேரடிப் பேச்சு பற்றிய விட யமே இப்போது தமிழர் தரப்பில் அதிகம் பேசப்படும் அரசியல் விவ காரமாக உள்ளது.

பக்கம் 02

## பயணத் தடையை முழுமையாக நீக்கினால் கொரோனாவின் நான்காம் அலை ஆபத்து




### எச்சரிக்கின்றது இலங்கை மருத்துவர் சங்கம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் நான்காவது அலை ஏற்படக்கூடிய ஆபத்து நெருங்கி வருகின்றது என இலங்கை மருத்துவர் சங்கத் தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மக்களின் நடமாட்டம் மற்றும் புழக்கங்கள் அதிகரித்து விட்டன எனவும், பயங்கரமான நிலையிலிருந்து இலங்கை மீண்டுவிட்டது எனக்

12

## நேற்று மட்டும் 2,419 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொரோனா வைரஸ் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 419 பேர் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள் ளது.

இதற்கமைய நாட்டில் கொரோ னாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர் களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 30 ஆயிரத்து 675 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 145 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை,

12

## கட்டடத் தொழிலாளி வீழ்ந்து பரிதாபப் பலி

யாழ்.நீர்வேலியில் கட்டட வேலையில் ஈடுபட்டபோது, மேல் தளத்திலிருந்து தவறி வீழ்ந்த தொழிலாளி பரிதாபமாக உயி ரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடை பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்., நாயன்மார்கட்டைச் சேர்ந்த நவரத்தினம் அன்ரன் ஜெயராஜா (வயது - 36) என்ற ஒரு பிள்ளை யின் தந்தையே உயிரிழந்துள் ளார்.

கட்டடத்தின் மேல் தளத்தில் சன்செட்டுக்குத் தூண் போடும் போது தவறி கீழே வீழ்ந்த அவர் மயங்கியுள்ளார்.

உடனடியாக கோப்பாய்வைத் தியசாலைக்குக் கொண்டுசென்ற வேளை அவர், ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

12

# ராஜபக்ஷ அரசை விரைவில் விரட்டியடிப்பர் சிங்களவர்கள்

## அடித்துக் கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.



எரிபொருள் விலையேற்றத்தினூடாக மக்களின் உணவிலும் வாழ்க்கையிலும் பாரிய அளவில் ராஜபக்ஷ அரசு கை வைத்திருக் கின்றது. மிகப் பெரிய அளவில் இந்த நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளுகின்ற வேலையை இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றது. தங்களுடைய தெரிவும் இனவாத அடிப்படையில் அவர்கள் அளித்த வாக்கும் எவ்வளவு கேவலமான முடிவு என சிங்கள மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் இந்த அரசை விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்பார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

12

## அமைச்சர் கம்மன்பில உடன் பதவியைத் துறக்கவேண்டும்

### மீண்டும் சர்ச்சையைக் கிளப்பினார் சாகர

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கான பொறுப்பை யேற்று வலுசக்தி அமைச்சர் பதவி விலகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இன்னும் இருக்கின்றேன். கட்சியின் நிலைப்பாடும் அதுவே.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. நேற்று மீண்டும் அறி வித்தார்.

12



## அமெரிக்காவின் இலங்கைக்கான புதிய தூதுவராக ஜூலி ஜியூன் சங்

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி ஜியூன் சங்கின் (Julie Jiyoon Chung) பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைட னினால் நேற்றையதினம் இவருடைய பெயர் பரிந்துரை செய்யப்பட்டதாக வெள்ளைமாளிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

12



## பிரேரணையை எதிர்கொள்ளத் தயார் மக்கள் என் பக்கமே; சாகரவுக்கு நன்றி

### இப்படிக் கூறுகின்றார் கம்மன்பில



எனக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையை எதிர்கொள் ளத் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தனக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கருத்து

12

## கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணையில் சாகர கட்டாயம் கையெழுத்திட வேண்டும்!

### சஜித் அணி எம்.பி. காவிந்த அழைப்பு



வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக் கிய மக்கள் சக்தி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில் லாப் பிரேரணையில் கட்டா யம் கையெழுத்திடுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியின் பொதுச் செயலா ளர் சாகர காரியவசத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஐக் கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன.

எரிபொருள் விலை குறைக் கப்படாவிட்டால் பயணக் கட் டுப்பாடுகள்

2

## கொரோனா சாவு மேலும் உயர்வு ஒரே நாளில் 59 பேர் பலியெடுப்பு

### மொத்தக் காவு 2, 374

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 59 பேர் உயிரிழந்துள் ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத் துள்ள அறிக்கையில் தெரி விக் கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 28 பெண் களும், 31 ஆண்களும் உள்ள டங்குகின்றனர்.

இதையடுத்து நாட்டில் பதி வான கொரோனா மரணங்க ளின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 374 ஆக அதிகரித் துள்ளது.

## ஒற்றை ஆசனத்தை 60 ஆக்குவார் ரணில்

### ஐ.தே.க. செயலர் பாலித நம்பிக்கை

ஐக்கிய தேசியக் கட்சி வசம் தற்போது ஓர் ஆசனம்தான் இருக் கின்றது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரச மற்றும் எதிரணி உறுப்பினர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர். எனவே, ஒன்று விரைவிலேயே 60 ஆக மாறும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்

12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பேச்சு மீண்டும் ஒரு திகதியில் விரைவில் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

நேற்று நடக்கவிருந்த பேச்சு தள்ளிப் போனமை பற்றி நேற்று முன்தினம் மாலையில் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் தொலைபேசியில் அறிவிக்கப்பட்டது.

ஆனால், அதன் பின்னர் நேற்றுப் பகலும் இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஒருவர் சம்பந்தனுடன் தொடர்பு கொண்டு பேசியிருக்கின்றார் எனத் தெரிகின்றது. விரைவில் புதிய பேச்சுத் திகதி தெரியப்படுத்தப்படும் என்ற தகவல் சம்பந்தனுக்கு அப்போது கூறப்பட்டுள்ளது.

அதேசமயம், பேச்சு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் சம்பந்தனும் ஜனாதிபதிக்கு ஒரு குறிப்பைக் கடிதமாக எழுதி அனுப்பியிருக்கின்றார் என்று தெரிகின்றது – புதிய திகதி பற்றிய அறிவிப்பை எதிர்பார்த்திருப்பதாக.

இந்தப் பேச்சு முயற்சிக்கான ஏற்பாடுகள் எங்கிருந்து ஆரம்பித்தன தெரியுமா?

கடந்த மாத இறுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஒருவர் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனைச் சந்தித்திருக்கின்றார். இருவரும் பல தரப்பட்ட அரசியல் விடயங்கள் குறித்துப் பேசியிருக்கின்றனர். முதலில் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேசப்பட்டிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் தொடங்கி கடந்த வருடம் வரை இவ்விடயத்தில் கூட்டமைப்பு எடுத்த முயற்சிகளையும், இவ்வளவு நீண்ட வருடங்களாக ராஜபக்ஷ ஆட்சிப் பீடங்கள் இது பற்றிக் கவலைப்படாமல் இழுத்தடித்து வருகின்றமையையும் விலாவாரியாகக் குறிப்பிட்டுத் தமது விசனத்தை வெளிப்படையாகத் தெரிவித்தார் சுமந்திரன்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபயவுடன் ஏன் நேரடியாகப் பேசித் தீர்க்கக் கூடாது என்று அவர் கேட்டார்.

நாங்கள்தானே அதற்குக் கோரிக்கை விடுத்து விட்டு, ஜனாதிபதியின் அழைப்புக்குக் காத்திருக்கின்றோம், நாம் பேச எப்போதும் தயார் என்று பதிலளித்தார் சுமந்திரன்.

பேச்சுக்கு நேரம் கோரி, நீங்கள் ஒரு கடிதம் தந்தால் உடனடியாக நேரடிப் பேச்சை ஆரம்பிக்கலாம். உங்கள் கோரிக்கையை ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கின்றார் என்றார் ஜனாதிபதிக்கு நெருக்கமான அந்த இடைத் தொடர்பாளர்.

நல்லது, சம்பந்தன் ஐயாவிடம் பேசி ஒரு முடிவு சொல்கிறேன் என்றார் சுமந்திரன்.

இதையடுத்து, சம்பந்தனுடன் சுமந்திரன் பேசினார். இந்த விடயத்தை நாங்கள் மிக சாதுரியமாகத்தான் கையாள வேண்டும் என்றார் சம்பந்தன். நாங்கள் போய்க் காலில் விழுவதாக இருக்கக் கூடாது என்ற தொனியில் இருந்தது சம்பந்தனின் நிலைப்பாடு. அதனால் தந்திரமான வாசகத்தில் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு வரைந்தார் சம்பந்தன்.

*“அரசமைப்பு உருவாக்கம் குறித்து நீங்கள் அமைத்த நிபுணர் குழுவிடம் எங்கள் யோசனைகளைச் சமர்ப்பித்து, நேரடியாகவும் விளக்கியுள்ளோம். அதற்கு மேல் இந்த விடயம் குறித்து எங்களுடன் பேசுவது உசிதமானது என நீங்கள் கருதினால் உங்களுடன் பேசத் தயாராக இருக்கின்றோம்”* – என்ற சாரப்பட அமைந்தது சம்பந்தனின் கடிதம். கடந்த 2ஆம் திகதியிடப்பட்ட அந்தக் கடிதத்தை சுமந்திரன் தமது முன்னைய தொடர்பாளர் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார்.

இதற்கிடையில் ஜூன் முதல் வாரத்தில் (8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது, நாடாளுமன்றத்தில் தமது அலுவலக அறையில் சுமந்திரனை அழைத்துத் தனியாகப் பேசினார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. மூடிய அறையில் இருவர் மட்டுமே நீண்ட நேரம் உரையாடினர்.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்துத் தீர்வுக்கு வழி தேட வேண்டும் என்று வலியுறுத்தினார் பிரதமர்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் போது தீர்வு காண்பதற்குக் கிடைத்த பல அரிய சந்தர்ப்பங்கள் கோட்டை விடப்பட்டமை பற்றி கவலை வெளியிட்டார் சுமந்திரன்.

நேரடிப் பேச்சை ஆரம்பிக்கும்படி தாம் ஜனாதிபதியை வழிப்படுத்தியிருக்கிறார் என அப்போது பிரதமர் குறிப்பிட்டார்.

அதற்குச் சாதகமான பிரதிபலிப்புகள் கிடைத்திருக்கின்றன எனப் பதிலிறுத்தார் சுமந்திரன்.

சம்பந்தன் ஐயா, ஜூன் 2ஆம் திகதி அனுப்பிய கடிதத்துக்கு அன்று ஜூன் 8ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து பதில் கிடைத்திருப்பதாகவும், ஜூன் 16ஆம் திகதி மாலை 4 மணிக்கு பேச்சுக்கு நேரம் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் சுமந்திரன் கூறினார்.

*“அப்படியா? நல்லது. என் எதிர்பார்ப்புப்படி ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுத்திருக்கின்றார். சரியான திசையில், பொறுப்புடன் பேச்சுக்களை எடுத்துச் செல்லுங்கள்.”* – என்று ஆலோசனையும் வாழ்த்தும் கூறியிருக்கின்றார் பிரதமர் மஹிந்தர்.

இதற்கிடையில், இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும்.

ஜூன் 16ஆம் திகதி பேச்சு நடத்தத் திகதியிட்டு ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து கடந்த 8ஆம் திகதி சம்பந்தனுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் நீங்கள் என்ன விடயங்கள் குறித்து பேச விரும்புகின்றீர்கள் என்பதை ஜனாதிபதி அறிய விழைகின்றார், தயவு செய்து அதன் விவரங்களைத் தெரியப்படுத்துங்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கு சம்பந்தன் ஒரு பதில் கடிதம் அனுப்பி வைத்திருந்தார். அது நீண்ட ஒரு பட்டோலை. எட்டுப் பங்கங்களில் அமைந்திருந்தது.

1987 நவம்பரில் இருந்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதல் இன்று வரை நாட்டின் ஆட்சிப் பீடத்திலிருந்த ஜனாதிபதிகள், அரசுத் தலைவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பல்வேறு தரப்புகளுக்கு – இந்தியா, ஐ.நா., ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், ஐ.நா. பொதுச் செயலாளர், ஐரோப்பிய ஒன்றியம் என்று பல தரப்பினருக்கு – அளித்த உறுதிமொழிகளை எல்லாம் வரிசைப்படுத்தி விவரித்த சம்பந்தன், அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படாமல், தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்ற விடயத்தை அப்பட்டமாகத் தெரிவித்திருக்கின்றார். இலங்கை ஆட்சிப் பீடம் மீது குத்து ஈட்டி தைப்பது போல அந்தக் குற்றச்சாட்டுகள் அடுக்கப்பட்டிருந்தன – நாகரிகமான வார்த்தைகளில்.

இந்தப் பின்புலத்தில்தான் பேச்சு நடக்கவிருந்த தினத்திற்கு முதல் நாள் பிரதமர் மஹிந்தருக்கு நெருக்கமான ஒருவர் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டார். மஹிந்தரின் சார்பில் யதார்த்த நிலைமையை சுமந்திரனுக்கு விளக்கினார். சம்பந்தன் கடைசியாக எழுதிய நீட்டுப் பட்டோலைக் குற்றச்சாட்டுக் கடிதம் அந்த விளக்கத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

*“இந்தச் சந்திப்பில் – பேச்சில் – பிரதமரின் பங்களிப்பை ஜனாதிபதி எதிர்பார்க்கவில்லை.*

*அதனால் இந்தப் பேச்சு மேசையில் பிரதமர் இருக்க மாட்டார். ஜனாதிபதியின் பண்பியல்பு, போக்கு, நடத்தை உங்களுக்குத் தெரியும். அவர் பிரதமர் போல நீண்ட பாரம்பரிய அரசியல் அனுபவத்தோடு வந்தவரல்லர். திடீர் கோபக்காரர். சம்பந்தன் பக்கம் இருக்கும் தமிழர் தரப்பு ஆதங்கங்கள் குற்றச்சாட்டுகளாகத் தொடர்ந்து முன்வைக்கப்படும் போது பேச்சின் ஆரம்பத்திலேயே மனஸ்தாபங்கள், குழப்பங்கள் ஏற்பட்டு விட வாய்ப்புள்ளது. ஆகவே பக்குவமாகக் கையாளுங்கள். எப்படியும் பேச்சு முயற்சி தொடர வேண்டும். வாக்கு வன்மை மிக்க நீங்கள் (சுமந்திரன்) விடயங்களை ஆரம்பத்தில் நேரடியாகக் கையாண்டால் – பேச்சை முன்னெடுத்தால் – நல்லது என்று பிரதமர் நினைக்கிறார்”* – என அத்தரப்பு சுமந்திரனுக்கு ஆலோசனை கூறியதாகவும் தகவல்.

அந்தத் தகவல் சுமந்திரனை எட்டியதாகவும் அறிந்தேன்.

இந்தப் பின்புலத்தில்தான் கடைசி நேரத்தில் பேச்சு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

பேச்சுக்கான ஆரம்ப முயற்சிகள், ஒழுங்குபடுத்தல்களிலேயே பல நெளிவு சுழிவுகள் உள்ளன. பேச்சை முன்னெடுக்க வேண்டும் என்று விரும்பும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேச்சு மேசையில் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. சம்பந்தனின் நீண்ட பட்டோலையே ஒரு வகையில் இலங்கை ஆட்சிப் பீடம் மீதான ஒரு நீண்ட குற்றச்சாட்டுப் பத்திரம்தான். அதை முன்னிறுத்தியபடிதான் பேச்சு மேசைக்குப் போக முனைகிறது கூட்டமைப்புத் தரப்பு.

இவற்றுக்கு மத்தியில்தான் இந்தப் பேச்சு இப்போதைக்குத் தள்ளிப் போயிருக்கின்றது.

ஆகவே, அதற்கான குற்றச்சாட்டு விரலை பேச்சுப் பற்றி செய்தியை வெளிப்படுத்தி குழப்பி விட்டது என்று பத்திரிகை மீது மட்டும் நீட்டுவதில் அர்த்தமில்லை.

– மின்னல் –

## கம்மன்பிலவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தளர்த்தப்பட்டதன் பின்னர் கறுப்புக் கொடியேந்தி வீதிகளில் போராடுவதற்குத் தயாராகவுள்ளதாகவும் காவிந்த ஜயவர்தன எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு – பொரளையிலுள்ள பேராயர் இல்லத்தில் நேற்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தின் காரணமாக பெருமளவான மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். மீனவர்களால் கொண்டு வரப்படும் மீன்களைக் கொள்வனவு செய்வதற்கும் நுகர்வோர் அஞ்சுகின்றனர்.

கொரோனா பரவலும் அந்த மக்களின் பொருளாதாரத்துக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே நாம் பேராயரைச் சந்தித்தோம்.

கத்தோலிக்க மக்களுக்காகவும் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மக்களுக்காகவும் பேராயர் முன்னின்று செயற்பட்டுள்ளார். 2015 இற்கு முன்னர் காணப்பட்ட அரசில் எரிபொருள் சலுகையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், எமது அரசில் மண்ணெண்ணெய் விலை அதிகரித்தபோது அதற்கும் எதிராகவும் பேராயர் மக்களுக்காக முன்னின்று செயற்பட்டார்.

எனவே, மீனவர்களின் நலன் கருதி எரிபொருள் விலையைக் குறைக்குமாறு அரசிடம் கோரிக்கையை முன்வைக்குமாறு பேராயரிடம் கேட்டுக்கொண்டோம்.

மேலும், ‘எக்ஸ் பிரஸ் பேர்ள்’ கப்பல் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ள 40 மில்லியன் டொலர் நட்டஈட்டைப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காகப் பயன்படுத்த அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறும் பேராயரைக் கேட்டுக்கொண்டோம்.

மக்களுக்கான இந்தக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இன்று அரசில் யாரும் இல்லை. ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப் போக்கிலேயே செயற்படுகின்றனர்.

இந்த ஆட்சியாளர்களால் மேற்குலக நாடுகளிடம் மண்டியிட்டு கடன் பெற்றுக் கொள்ளும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர் உதய கம்மன்பிலவைப் பதவி விலகுமாறு வலியுறுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாரக காரியவசத்துக்கு எம்மால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடுமாறு அழைப்பு விடுகின்றோம்.

எவ்வாறிருப்பினும் உதய கம்மன்பில பதவியிலிருந்து விலக்கப்பட்டாலும் மீனவர்களுக்கான நிவாரணங்களுக்காகக் குரல் கொடுப்தை நிறுத்தப் போவதில்லை.

எரிபொருள் விலை குறைக்கப்படாவிட்டால் நீர்கொழும்பில் கறுப்புக் கொடியேந்தி பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் வீதிகளில் இறங்கிப் போராடுவோம். மீனவர்களே வீதிக்கு இறங்குவதற்குத் தயாராகுங்கள் – என்றார்.



# சீன கம்யூனிஸ்ட் இடதுசாரி இயக்கத்தின் ஆதரவு காரணமாக ஓர் அணிசேரா நாடாக சுதந்திர உலகில் முன்னேற முடிந்தது

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம்



கொழும்பு, ஜூன் 17

சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இடதுசாரி இயக்கத்தின் ஆதரவு காரணமாக ஓர் அணிசேரா நாடாக சுதந்திர உலகில் முன்னேற முடிந்தது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் அலரி மாளிகையில் வைத்து தெரிவித்தார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூறாவது ஆண்டு விழாவில், காணொலி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை வருமாறு –

சீனாவின் எழுச்சியை அடிப்படையாகக் கொண்டே இந்நூற்றாண்டில் ஆசியாவின் எழுச்சி இடம்பெறும் என்பது எம் அனைவரதும் நம்பிக்கையாகும். அந்த வரலாற்று வெற்றியை சீனாவிற்கு பெற்றுக் கொடுத்தது இத்தால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1921ஆம் ஆண்டு பன்னிரெண்டு பேர் ஒன்றிணைந்து உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாகும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அதனாலேயே சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆசியாவிற்கே மிகப்பெரியதும், முக்கியமானதுமான கட்சி என்று நான் கூறினேன்.

சீனா என்பது நாடு மட்டுமல்ல. சீனா என்பது மாபெரும் நாகரிகம். சீனா பல்வேறு நாடுகளால் படையெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டதே தவிர சீனா ஒருபோதும் பிற நாடுகள் மீது படையெடுக்கவில்லை. அத்துடன் உலகின் பெரும் தொகையான மக்கள் ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை நம்பியுள்ள நாடு இதுவாகும்.

அது மட்டுமல்லாமல், விவசாயத்தின் மீது நம்பிக்கை கொண்டு அதன் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட நாடாக சீனா பார்க்கப்படுகிறது. அதனால் தான் சீனாவை ஒரு சிறந்த நாகரிகம் என்று நான் கூறினேன்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி அந்த நாகரிகத்தின் அடையாளத்தை இனங்கண்டு பணியாற்றியமையாலேயே இன்று சீனாவை உலகின் சக்தியாக வளர்ச்சி பெறச் செய்ய முடிந்துள்ளது.

சீனாவிற்கும் எங்களுக்கும் இடையே வரலாற்று ஒற்றுமைகள் உள்ளன. சீனாவின் பெரிய சுவரை சீனா கட்டும் போது, நமது மன்னர் தேவநம்பியதிஸ்ஸ மன்னன் அநுராதபுர மஹமேவனா உயனவினை நிறுவினார். எங்கள் வரலாற்று ஒற்றுமைகள் மற்றும் நட்பு மிகவும் சக்திவாய்ந்தவை.

ஒரு சக்திவாய்ந்த நாடாக சீனா நமது சுயாதீனத்தைப் பாதுகாக்கப் பெரிதும் உதவியது. இது பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைய எங்களுக்கு உதவியது.

சீன அரிசி இறப்பர் ஒப்பந்தம் இலங்கையர்களுக்கு இன்னும் நினைவிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கையின் சுதந்திரத்துக்காக சீனா செய்த சேவையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

எமது வரலாற்று ரீதியான நண்பர் என்றே நான் எப்போதும் சீனாவிற்கு கூறினேன். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிதான் சீன கம்யூனிஸ்ட் கட்சியை எங்களுக்கு மிக நெருக்கமாக்கியது. – என்றார்.

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு கிரான்குளம் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குளம் வடக்கு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான 52 வயதுடைய ந.பிரமராணி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

செவ்வாய் மாலை வழமைபோல தனது வெள்ளரி தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவதற்கு நீர் பம்மில் மின்சார கையாண்டபோது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# நாயாறு - நந்திக்கடல் - காக்கைதீவு என்று நாடெங்கும் பாரிய அபிவிருத்தி

## அமைச்சர் டக்ளஸ் தீவிரம்



யாழ்ப்பாணம், ஜூன் 17

நந்திக்கடல், நாயாறு களப்புக்களின் புனரமைப்பு பணிகளை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். காக்கைதீவு கடல் நீரேரியை தூர்வாருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற களப்புக்களைப் புனரமைக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சரால் மேற்குறித்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற சுமார் ஒன்பது பிரதான களப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நக்டா, நாரா மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது, முல்லைத்தீவு, நந்திக்கடலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு விட்டன எனத் தெரிவித்த அதிகாரிகள், நந்திக் கடல் அபிவிருத்தி திட்டம் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

அதேபோன்று, நாயாறு களப்பு அபிவிருத்திக்கான விலைமனுக் கோரல் நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்த நிலையில், விலைமனுக் கோரல் தொடர்பான விளம்பரங்களை அமைச்சின் இணையத் தளத்தில் தகுதியானவர்களைத் தெரிவுசெய்து வேலைகளை ஆரம்பிக்குமாறு தெரிவித்தார்.

அதேபோன்று, ரெக்கவ களப்பு அபிவிருத்தி திட்டம் மதிப்பீட்டுக்காக பிரதேச சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அருகம்பே களப்பு தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் கரையோர பாதுகாப்பு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவித்தாகவும் கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவித்த அதிகாரிகள், அனுமதி கிடைத்தவுடன் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டத்துக்குரிய பாணம மற்றும் பாணகல களப்புக்களின் அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் புத்தளம், சிலாபம், முந்தல் ஆகிய களப்புக்களும் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமெனவும் அமைச்சர் அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடலட்டை பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பூநகரி களப்புக்களில் இறால் வளர்ப்பு தொடங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நக்டா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன், யாழ். காக்கைதீவு களப்பு தூர் வாரப்பட வேண்டுமெனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், அதற்கான நிதியைத் திரட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும், நாடெங்கிலுமுள்ள பிரதான 9 களப்புக்களின் அபிவிருத்திக்கான திட்டங்களையும் இந்த வருட இறுதிக்குள் வகுத்து அந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, நக்டா நிறுவனத்தின் தலைவர் நிமல் சந்திரரத்ன, நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரத்னராஜா உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்களை நோகலாமா?

நாய்க்குக் கல் எறி எங்கு பட்டாலும் அது காலைத் தூக்கிக் கொண்டு ஓடும் என்பார்கள். அரசியல்வாதிகளும் அப்படித்தான்.

நல்லது எது நடந்தாலும் தாங்களே அதனைச் செய்தார்கள் என்பார்கள். அல்லது தங்களால்தான் அது நடந்தது என்பார்கள். தீமையான, பிழையான ஒரு விடயம் நடந்தால் எதிர்த் தரப்பு மீது அந்தக் குற்றச்சாட்டைப் போடுவார்கள்.

தமது பகிரங்கக் கருத்து வெளிப்பாடு ஒன்றின் மூலம் தாமும் அந்த சாதாரண அரசியல்வாதி வகையறாவிலிருந்து வேறுபட்டவர் அல்லர் என்பதை இனங்காட்ட முயன்றிருக்கின்றார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

எனினும் தமது கருத்து வெளிப்பாடு மூலம் யதார்த்தப் புறவுண்மையையும் தெரிந்தோ, தெரியாமலோ – விரும்பியோ, விரும்பாமலோ – அவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியே உள்ளது.

மாகாண சபையின் கீழ் இயங்கி வரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உட்பட ஒன்பது மாவட்ட பொது வைத்திய சாலைகளை மத்திய அரசு தனது நிர்வாகத்தின் கீழ் பொறுப்பேற்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இது மாகாணத்தின் அதிகாரங்களை – 13ஆவது திருத்தத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை – மத்திய அரசு திரும்பப் பிடுங்கிக் கொள்ளும் நடவடிக்கை.

இதேபோன்றுதான், பாடசாலைக் கல்வியும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வில் அடங்குவது. மாகாணங்களின் கீழ் இயங்கும் பிரபல பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்துவது என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கைகள் கனகச்சிதமாக அரங்கேறுகின்றன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள் நீண்ட பல வருடங்களாக செயலிழந்து போயுள்ள துரதிஷ்டவசமான நிலைமையைப் பயன்படுத்தி, மாகாணங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பறித்தெடுத்துத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றது மத்திய அரசு.

ஏற்கனவே உலக்கை தேய்ந்து உளிப்பிடியான அளவுக்கு சுருங்கிப் போயிருக்கும் மாகாண நிர்வாக முறைமை இத்தகைய நடவடிக்கை மூலம் மேலும் அற்பமாகிப் போகும் அபத்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

சரியோ, பிழையோ, இப்படி மாகாணங்களின் நிர்வாகத்தில் இருக்கும் மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் அரசியல் நடவடிக்கைகளை அரசுக்குள் இருந்து கொண்டே துணிச்சலுடன் ஆட்சேபித்திருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இப்படி மாகாண நிர்வாகங்களின் கீழ் இருக்கும் மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு – மத்திய அரசின் சுகாதார அமைச்சு – பொறுப்பேற்பது அரசமைப்புக்கு முரணானது என்றும், அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்கும் மக்களுக்கு இது ஏமாற்றமளிக்கும் செயற்பாடாக அமையும் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது ஆட்சேபனையை அமைச்சரவைக்குள்ளேயே பதிவு செய்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அரசுக்குள் இருந்து கொண்டு இப்படி அரசின் முடிவை எதிர்க்கிறேன், ஆட்சேபிக்கிறேன் என்று அமைச்சரவையிலேயே கூறுவது அரசியல் துணிச்சல், தைரியம் மிக்க நடவடிக்கை. அதற்காக அவர் பாராட்டுக்குரியவர்.

கடந்த காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, அக்காலப் பகுதியில் தனக்கிருந்த அரசியல் பலத்தினைப் பயன்படுத்தி, மாகாண சபைக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்வதைத் தாம் தடுத்து நிறுத்தினார் எனவும், தற்போதைய அரசியல் சூழலில் இவ்வாறான விடயங்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய அரசியல் பலம் தன்னிடம் இல்லை எனவும், மக்களின் தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களின் விளைவு இது எனவும் அவர் விசனித்திருக்கின்றார்.

தமக்கு சரியான அரசியல் பலத்தை மக்கள் தராதமையால் இந்நிலைமை என்று அவர் கூற விழைகின்றார். அது தவறு.

'Men may come and men may go' என்றொரு ஆங்கில கவிதை வரித் தொடர் ஒன்று உண்டு.

தலைவர்கள் வருவார்கள், போவார்கள். யாரும் சாசுவதம் அல்லர். முறைமைகள் தாம் நிலைத்திருக்கும்.

மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்படாமல் இருப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அரசியல் பலத்துடன் அதிகாரத்தில் எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவது அர்த்தமற்றது; அபத்தமானது.

அதற்கான முறைமையை ஒழுங்கு படுத்துவதுதான் அதற்கு ஒரே வழி; ஒரே தீர்வு.

சாதாரண ஒற்றையாட்சியில் 13ஆவது திருத்தத்துக்கு மேற்பட்டு அதிகாரங்களைப் பகிர்ந்தாலும் அது அமைச்சர் டக்ளஸ் இல்லாத காலத்தில் பிடுங்கப்பட்டு விடும். அவர் காலங்காலமாக இருந்து பகிரப்பட்ட அதிகாரங்களைக் காபந்து பண்ண முடியாது.

அதனால்தான், பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப் பிடுங்காத முறைமையான 'சமஷ்டி ஆட்சி' முறையை தமிழர்கள் விரும்புகின்றார்கள். அமைச்சர் டக்ளஸை விடுத்து, அந்த 'சமஷ்டியை' வலியுறுத்தும் கட்சிகளுக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கின்றார்கள். அதற்காக அந்த மக்கள் மீது அமைச்சர் நோவதில் அர்த்தமில்லை.

# மாகாண தேர்தலுக்கு முன்பாகவே அதிகாரத்தை பறிக்க அரசு தீவிரம்

## முன்னாள் மாகரண அமைச்சர் ஐங்கரநேசன் காட்டம்



இலங்கையின் மாகாண சுகாதாரத் திணைக்களங்களின் கீழ் இயங்கி வந்த ஒன்பது மாவட்டப்பொது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் நான்கு பொது வைத்தியசாலைகளும் அடங்கும். அரசமைப்பு மாற்றம், கொரோனாப் பேரிடர் போன்றவற்றைக் காரணங்காட்டி மாகாணசபைத் தேர்தல்களை நடத்தாது பிற்போட்டுவரும் அரசாங்கம் தேர்தலுக்கு முன்பாகவே அதற்குரிய அதிகாரங்களைப் பறித்துவிட வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது என்பதையே இது காட்டுகிறது.

–இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மாவட்டப் பொது வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்துக்குள் உள்வாங்கும் சுகாதார அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை கடந்த திங்கட்கிழமை அங்கீகாரம் வழங்கியுள்ளது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையில் மாகாணசபை முறைமை தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இந்திய அரசு இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இது ஒருபோதும் தீர்வாகாது என்றபோதும், இதனை ஓர் ஆரம்பப்புள்ளியாகக் கருதி தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தைப் புறந்தள்ளி மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட அற்பசொற்ப அதிகாரங்களைக் கூடத் தோலிருக்கச் சுளை பிடுங்கும் கதையாகப் பேரினவாத அரசாங்கம் பறித்து வருகிறது.

மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பிரதேசசெயலர்களை மத்திய அரசின் மாவட்ட செயலகங்களுக்குள் உள்ளீர்த்த அரசாங்கம், பின்னர் கமநல சேவைகள் திணைக்களத்தையும் பறித்துக்கொண்டது. இன்று வடக்கு மாகாணத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் குளங்கள் எதிலும் மாகாண நிர்வாகம் நேரடியாகத் தூர்வாரவோ அபிவிருத்திகளை மேற்கொள்ளவோ இயலாது. மாகாணத்துக்கென்று எஞ்சியுள்ள பெருங் குளங்கள் சிலவற்றையும் மாகாணங்களுக்கு இடையில் நீரைப் பங்கிடுதல் என்ற செயற்றிட்டத்தின் மூலம் பறிப்பதற்கான பாசனத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதியின் 'சுபீட்சமான நோக்கு' என்ற செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக 25 பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக்கிய அரசாங்கம் தற்போது அடுத்த கட்டமாக 32 பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக மாற்றும் நோக்குடன் அடையாளப்படுத்தியுள்ளது.

வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பறிகொடுப்பதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் அது அவர்களது அரசாங்கமே.

மாகாண அதிகாரங்களை மத்திய அரசாங்கத்துக்குத் தாரைவார்ப்பதில் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ் அரசியல்வாதிகள் துணைபோகின்றமை பெருஞ்சோகம். மாகாண நிர்வாகத்துக்கு மத்தியிடமிருந்து மென்மேலும் அதிகாரங்களைப் பெற்றுக் கொடுத்துப் பலப்படுத்த வேண்டிய இவர்கள் மாகாணத்தின் அதிகாரங்களைப் பறிக்கும் மத்திய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்தூதுபவர்களாக இருக்கின்றமை கண்டிக்கத்தக்கது.

தமிழ்த்தேசியப் பற்றுறுதியுடன் இயங்கும் அனைத்துத் தரப்பினரும் அரசாங்கத்தின் கரவான இந்த முயற்சிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்–என்றும்குறிப்பிட்டுள்ளார்.

# சுன்னாகத்தில் வடிசாராய உற்பத்தி; குற்றத்தடுப்புப் பிரிவால் ஒருவர் கைது

சுன்னாகம் குப்பிளான் பகுதியில் பற்றைக்குள் வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட நபர் வடிசாராயத்துடன் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் போதைத்தடுப்பு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குப்பிளான் பகுதியில் உள்ள பற்றைக்குள் வைத்து வடிசாரய உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியைச் சுற்றி வளைத்த மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் குறித்த நபரைக் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து 270 லீற்றர் வடிசாராயம் மற்றும் உற்பத்தி உபகரணங்கள் என்பனவற்றையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர் குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த கைது நடவடிக்கை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான குழு வினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பய ணக்கட்டுப்பாடு உள்ள நிலையில் சட்டவிரோதமான முறையில் மதுபான உற்பத்தியில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்யும் நோக்கில் மாவட்டம் முழுவதும் குறித்த குழுவினரால் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அநேகர் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் மரணங்கள் குறைய 2 - 3 வாரங்கள் செல்லலாம்

## சுதர்ஷினி தெரிவிப்பு



கொவிட் மரணங்கள் அதிகரித்தாலும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளதாக கொவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

றாகம போதனா வைத்தியசாலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

பயணக்கட்டுப்பாட்டை அரங்சாங்கம் தற்போது நீடித்துள்ளது. மருத்துவ பார்வையில் இது மிகவும் நல்லது. எனினும் நாட்டு மக்களுக்கு அசௌகரியமும் உள்ளது. தற்போது நோயாளர்கள் குறைவடைந்து வருகின்றனர். மரணங்கள் குறைவடைய இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் செல்லும். உருமாறிய புதிய வைரஸ் காரணமாக தொற்று ஏற்பட்டு 10 நாள்களுக்குள் மரணம் ஏற்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 23ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

221. இலங்கையை போர்த்துக்கேயர் ஆட்சி செய்த காலப்பகுதி யாது?
222. $20ms^{-1}$ இனை $Kmh^{-1}$ இல் காண்க?
223. தற்போதைய டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அணி எது?
224. காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப்பதிப்பு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
225. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்?
226. இலங்கை கடற்பரப்பில் அண்மையில் தீ விபத்துக்கு உள்ளான கப்பலின் பெயர் யாது?
227. மிக விரைவில் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள பல்கலைக்கழகம் எது?
228. இலங்கையின் முதலாவது பெண் பிரதமர் யார்?
229. இலங்கையின் குடியரசு தினம் எப்போது?
230. இலங்கை கிரிக்கெட் அணி ரி-20 உலகக் கோப்பையை வெல்லும்போது அதன் தலைவர் யார்?

பெயர் :- ................................................. அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................. மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 21ஆவது போட்டிக்குரிய பதில்கள்

201) ரபலேசியா
202) இங்கிலாந்து
203) ஜேதவனராம் விகாரை
204) இடுகம
205) ஜப்னா ஸ்ரானியன்ஸ்
206) எமது சுற்றாடல் கட்டமைப்பை பாதுகாப்போம்
207) 1 - 240 மணித்தியாலம்
208) 8000u
209) சீனா
210) இங்கிலாந்து

## 15ஆம் திகதி வெளியான 21ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஜெ. வினோஜன் - குடத்தனை (08 சரி)
2. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (07 சரி)
3. வை. அபிமாறன் - கரவெட்டி (06 சரி)
4. ஏ.துஷான் - நீர்வேலி (06 சரி)
5. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் (06 சரி)
6. கே. அனுசன் - ஏழாலை (06 சரி)

# இலங்கைக்கான அமெ. தூதராக ஜூலி சங்கின் பெயர் பரிந்துரை



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங்கின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பரிந்துரை செய்துள்ளார்.

வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் நியமனத்தை அமெரிக்க செனட் சபை உறுதிப்படுத்தினால் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சங் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவராக அலெய்னா டெப்லிட்ஸ் உள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் இந்த பதவியை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி மனிதநேய அமைப்பின் நற்பணி காலத்தின் தேவை கருதிய கனதியானது

## சிறிதரன் எம்.பி. பெருமிதம்

உலகப்பந்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளின் தன்னலம் கருதா மனிதாபிமானப் பணிகளே, தமது இருப்பைத் தக்கவைக்க எல்லா வழிகளிலும் போராடும் நிலையிலுள்ள ஈழத்தமிழர்களுக்கு என்றும் உறுதுணையாய் இருந்து வருகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இத்தாலி மனிதநேய அமைப்பின் நிதியுதவியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர வீட்டைக் கையளிக்கும் நிகழ்வின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

காலத்தின் தேவையறிந்து சேவையாற்றும் இத்தாலி மனிதநேய அமைப்பு உள்ளிட்ட தன்னார்வ அமைப்புக்களின் உதவிகள் தான் போராலும், இயற்கைப் பேரிடர்களாலும், கொரோனா பெருந்தொற்றாலும் தொடர் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் எமது மக்களை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இத்தாலி மனிதநேய அமைப்பின் ஸ்தாபகர் மகேஸ்வரநாதன் கிருபாகரனின் வழிகாட்டுதலில், சுவிஸ் நாட்டில் வசிக்கும் நல்லையா பாஸ்கரன் என்பவரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 10 ஆம் வட்டாரம், புதிய குடியிருப்பு, புதுக்குடியிருப்பில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் நிலைகருதி ஆறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர வீட்டை பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு இத்தாலி மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான தலைவர் சிவலிங்கம் புஸ்பகாந்தான் தலைமையில் சுகாதார விதிமுறைகளுக்கமைய நடைபெற்றது.



இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபதவிசாளர் க.ஜனமேஜந், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் யாழ் மாவட்ட இணைப்பாளர் க.சூரியகாந்த், புதியகுடியிருப்பு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் றொபின்சன் ஆகியோருடன் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கப்பலால் ஏற்பட்ட கடல் மாசுவை நிவர்த்தி செய்ய நோர்வே உதவி

தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்- பிரஸ் பேர்ள் கப்பல் காரணமாக ஏற்படும் கடல் மாசுபாட்டை நிவர்த்தி செய்ய நோர்வே கடலோர நிர்வாகம் தொலைதூர உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள நோர்வே தூதுவர் ட்ரைன் ஜெரான்லி எஸ்கெடல், நோர்வே நிபுணர்கள் இலங்கை அதிகாரிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினர் எனக் கூறினார்.

நோர்வே கடலோர நிர்வாகத்தின் வல்லுநர்கள் தொலைதூர உதவிகளை வழங்கியுள்ளனர் என்றும் சாத்தியமான உதவியின் ஏனைய வழிகளையும் நோர்வே ஆராய்ந்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்துக்கு அண்மையில் தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் காரணமாக கடல் மாசுபாடடைந்துள்ளது.

இதனால் பல கடல்வாழ் உயிரினங்களும் உயிரிழந்து வருகின்றமையுடன், குறித்த பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மீன்வள நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir




- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 38

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**125. இவர்களை வழிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் எழுந்தனவா? விடுதலைப் புலிகளின் மதி உரைஞர் பாலசிங்கத்தை அவர்களுக்கு நீங்கள் அறிமுகப்படுத்தியதாக ஒரு தகவல் கூட கிட்டடியில் வந்ததே?**

என்னுடனான ஒரு நேர்காணலில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஊடக ஈர்ப்பிற்கு எழுதிய அந்த நிருபருக்கே பின் நான் யார் யாரை அறிமுகப்படுத்தினேன் என்பதல்ல முக்கியம், தமிழ் மக்கள் இன்று இருக்கும் நிலையில் அவர்கள் முன்னெடுக்க வேண்டியவை என்பதுதான் காலத்தின் தேவை என்று செய்தி அனுப்பியிருந்தேன்.

அதுபோலவே இந்தத் தொடர் வளந்து வர அமிர்தலிங்கத்தின் ஈடுபாடுகள் பற்றி விவரித்த சம்பவங்கள் வரும்போது, நானறிந்த பலர் என்னுடன் தொடர்பு கொண்டனர். நான் இங்கு குடிபெயர்ந்த 84இலிருந்தே என்னுடன் பழகியவர்கள். அகதி அந்தஸ்துக்கு வாதாடி நிரந்தர குடியுரிமைகளையும் பெற்றுக் கொடுத்திருந்தேன். இங்கு வரும் பொழுது பல இயக்கங்களில் தொடர்புடன் இருந்து பின் அவற்றிலிருந்து விலகி, இங்கு வந்தபின், தங்களால் இயலக்கூடிய அளவில் போராட்டத்துக்கு நிதி உதவி செய்தவர்கள், ஊரில் இருந்த இயக்க மோதல்களால் இங்கும் அடையாளம் காணப்பட்டு ஓரங்கட்டப்பட்டவர்கள், இங்கிருந்தே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தேடி சமூக அந்தஸ்தும் அங்கீகாரமும் பெற்றவர்கள். அப்படி பலர். அவர்கள் பட்ட அனுபவங்கள், இங்கு வந்து சேருவதற்காக அனுபவித்தவை, இங்கு அகதி உரிமைகளுக்காக பட்ட அல்லல்கள் எல்லாமே வேதனை தருபவை. அனுபவங்கள் கொடுப்பவை. அவர்களில் ஒரு சிலரை நான் நன்கு அறிவேன். இயக்கத்தில் ஈடுபட்டு உண்மையான அர்ப்பணிப்புடன் பங்காற்றி பின் வெளியேறியவர்கள். அவர்கள் தங்களின் எத்தனையோ அனுபவங்களைக் காலம் காலமாக சொன்னவர்கள். அவை கலங்க வைக்கும். அவர்கள் என்னிடம் விநயமாக சில வேண்டுகோள் வைத்தார்கள்.

அது, விடுதலைப்புலிகளை பற்றி எழுதும் போது அவர்களின் வரலாற்றை, அவர்கள் இலட்சியமாகக் கொண்ட தனித்தமிழ் ஈழம் என்பதற்கு தாங்கள் உணர்வு பூர்வமாக தந்த அர்ப்பணிப்பை, தங்கள் உயிர்களால் தந்த தியாகத்தை, மறக்காமல் சொல்ல வேண்டுமென்பது.

யாரையும் குறை கூறுவதோ, எந்த அர்ப்பணிப்பையும் கொச்சைப்படுத்துவதோ எனது நோக்கமல்ல. எந்த இயக்கத்தினதும் வரலாறுகளை நான் எழுத முற்படவில்லை. அது என்னால் முடியாததும் கூட.

தமிழர்களது உரிமை போராட்டத்தில் நடந்த பூசல்கள், புயல்கள், சுறாவளிகள், எப்படி அதனை பாதித்தது, பாதிக்கிறது, நாங்கள் எமது போராட்டத்தை



Mr J.N. Dixit with the LTTE Supremo Pirabakaran and Maj. Gen. Harkirat Singh, GOC IPKF after the conference on 26 September 1987.

அறிவுபூர்வமாக முன்னேற்றினோமா அன்றில் உணர்ச்சியினால் இந்த நிலையில் நிற்கிறோமா, இங்கிருந்து என்ன வழி என்பதைப் பார்ப்பதே எனது நோக்கம் என சொன்னேன்.

அவர்கள் என்னை நன்கு அறிந்தவர்கள். நீங்கள் தொடக்கத்திலிருந்தே பார்த்தவற்றை எழுத வேண்டும், இடையில் வந்து அர்ப்பணிப்புச் செய்த எங்களில் பலருக்கே நடந்தவை எவ்வளவோ தெரியாது, நாங்கள் எங்களது தோழர்களும் தோழிகளும் செய்த உணர்வுபூர்வமான தியாகங்களை பார்த்தும் படித்தும் அந்த வேள்வித் தீயில் அழிந்து போக ஒத்துக் கொண்டவர்கள், இன்றும் தனித் தமிழ் ஈழம் அமையும் என்று நம்புகிறோம், அந்த உணர்வை சொல்லுங்கள் என்று கேட்டார்கள்.

நான் அறிந்தவற்றைத் தான் சொல்லுகிறேன். அனுமானத்தில் அல்ல. ஆகவே அந்த உணர்வுகளுக்கு என்றும் மதிப்பிருக்கும். சருகுப் புலிகளுக்கும் காகிதப் புலிகளுக்கும், வரி போட்ட புலிகளுக்கும் வீரப் புலிகளுக்கும் இருக்கும் வித்தியாசங்களை நானறிவேன் என்று அவர்களது அங்கலாய்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

ஆக அவை பற்றி இப்போது முக்கியத்துவம் எடுத்து பதில்களில் ஈடுபடாமல் அறிவுபூர்வமாக பிரச்சாரங்களிலிருந்து வேற்றுமைப்படுத்தி எவற்றை விளங்கிக்கொள்ள வேண்டுமோ அவற்றைப் பார்ப்போம்.

**126. முரணாகப் பிரச்சாரப்படுத்தப்பட்டது என்று எதைச் சொல்கிறீர்கள் ?**

ஏன் அமிர்தலிங்கத்தினதும் யோகேஸ்வரியினதும் கொலைகளேயே பாருங்கள். இவர்கள் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவர்கள், அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று பரவலான அறிவிப்புகள் சமூக அங்கீகாரத்துக்காக துரையப்பா போன்று ஏற்படுத்தப்படவில்லை என்பதை மக்கள் தெரிந்திருந்தார்கள். ஒரு வெடிகுண்டினாலோ அல்லது பொது இடத்தில் துரோகியாகக் கணித்துக் கொலை செய்யப்படவில்லை. தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடிய இந்தியப் படைகளை வெளியேற்றும் திட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸாவும் பாதுகாப்பு மந்திரி ரஞ்சன் விஜேரத்தினவும் இணைந்திருந்ததால், அமிர்தலிங்கம் தங்களோடு சேர்ந்தோ அல்லது வேறு விதங்களிலோ வெளிப்படுத்தக் கூடிய அறிக்கைகள் இவற்றைப் பாதிக்கும் என்று அவர்களுடன் ஏற்பட்ட புரிந்துணர்வில்தான் இது நடத்தப்பட்டது.

பேச்சுவார்த்தைக்குப் பிரபாகரனை அழைத்து, அவர் ஒத்து வராவிட்டால் சுட்டுக் கொல்லுமாறு ராஜீவ் தனக்கு சொல்லியிருந்தார் என்று அப்பொழுது டிக்ஸிற் சொன்னார் என்பது மிகப் பரவலாக பிரச்சாரப்படுத்தப்பட்டது. பகவத்கீதையின் தாயகமான பாரதமே தூதுவனைக் கொல்லத் திட்டம் தீட்டுகிறதே என்று காறி உமிழ்ந்தோம். ஆனால் கூட்டு சேர்ந்தவர்களுக்காக, சந்தர்ப்பம் கிடைத்தபோது, ஆயுதத்தோடு தங்களின் பாதுகாப்புக்காக வருவோம் என்று நிபந்தனையிட்டு அதனை நம்பி, ஏற்று விருந்தாளிகளாக வரவழைத்து, சாப்பிட்டுத் தேனீர் கொடுத்து உபசரித்தவர்களையே கொலை செய்வதென்றால், இப்படியாகப் பெறப்படும் விடுதலையால் என்ன விடிவு கண்டிருப்பார்கள் தமிழர்கள்?

பிரபாகரனின் தோழர்களிடமிருந்து நான் ஒரு தகவல் அறிந்தேன். அவர், புத்தூர் வங்கிக் கொள்ளையில் கிடைத்த பணத்தில் சிறு பகுதித் தொகையில் செல்வச் சந்நிதி கோவிலில் ஓர் அன்னதானம் செய்தாராம். மற்ற சில தோழர்கள் கடவுள் நம்பிக்கையில் பெரு நாட்டம் இல்லாதமையால் அதை எதிர்த்தனர். அவர், தாங்கள் பட்டினி கிடந்த நாள்களின் உணர்வால் மற்றவருக்கு ஒரு நேர உணவாவது தருவோம் என்று கூறி அது செய்யப்பட்டதாகவும் அறிந்தேன். அதே போல் அவர் சாத்திர சம்பிரதாயங்களிலும் நம்பிக்கை கொண்டவராக விளங்கினாராம். ஆகவே கீதையின் போதனைகள் தெரிந்திருக்கும். என்றாலும் கர்மத்திற்காக சுற்றம், சொந்தம், நட்பு, பாசம் எல்லாம் சூனியமாக இருந்திருக்கலாம். எய்தவர்கள் இவர்கள். ஆனால் சொன்னவனோ?

கொலைகளுக்கு பின் நடந்த கடிதப் பரிமாற்றங்களில் ராஜீவ் காந்தி “எங்கள் இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் மனச் சாட்சியின் அடிப்படையிலும் சட்ட பூர்வமாகவும் தமிழர்களுக்கு அவர்களது தன்னாட்சியைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்” - என்று எழுதினார்.

பிரேமதாஸாவோ மிகவும், காரசாரமாக புலிகள் துணை நின்றதால், “அது உள்நாட்டு விவகாரம். அதனை நாங்கள் புலிகளுடன் பேசுகிறோம். நீங்கள் இங்கே நிலை கொள்ளுவதுதான் அதற்கு முட்டுக் கட்டை. ஆகவே நீங்கள் வெளியேற திகதி குறிப்பிடப் படவேண்டும்.” - என்று நிர்ப்பந்தித்து பதில் தந்தார்.

(வளரும்...)

# அரசு மக்களுக்கு உறுதியளித்துள்ள வாக்குறுதிகள் அனைத்தும் பொய்

## கலையரசன் எம்.பி. காட்டம்



இந்த நாட்டின் தலைவர்கள் ஒரு சீரான அரசியலைச் செய்ய முடியாத தலைவர்களாக தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஏற்பாட்டில் கனடாவில் வசிக்கும் தனியார் நிவாரணம் அமைப்பின் ஊடாக கனடா வாழ் மக்களின் நிதி உதவியின் மூலம் அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா நிலைமையால் பாதிப்புற்ற வறிய குடும்பங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் உலர் உணவுப் பொதிகளை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது மிகவும் அராஜகமான அரசியல் நடந்து கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் மிக மோசமாகக் குற்றங்களைச் சுமத்தியவர்கள் தற்போது அதனை விட மோசமான செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நாட்டில் சாதாரண மக்கள் வாழ முடியாத ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் ஒரு பொய்யான வாக்குறுதிகள் என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று எரிபொருள் மாத்திரமல்ல விவசாயிகளும் வாழ முடியாத ஒரு நிலைமையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். உரம் மற்றும் கிருமிநாசினிகளை விவசாயிகள் பெற முடியாத நிலையில் இருக்கின்றார்கள். உரிய விலையை விட மேலதிகமாகத் தொகை கொடுத்து தங்கள் பயிர்களைக் காப்பற்றக் கூடிய சூழ் நிலைக்கு இன்று விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

உர விடயத்தில் அரசாங்கம் முற்கூட்டியே விவசாயிகளுக்கான விளக்கங்களை வழங்கியிருக்க வேண்டும். எவ்வித முன்னறிவித்தலுமின்றி இவ்வாறான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்கின்றது.

இன்று எரிபொருள் விலையேற்றத்தில் உரிய அமைச்சர் ஒரு கருத்தும், இந்த நாட்டின் தலைவர் ஒரு கருத்தும் ஏனைய அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஒவ்வொரு கருத்தும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கருத்துமாக அவர்களுக்குள்ளேயே முட்டி மோதுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இதனைப் பார்க்கின்றபோது, ஒரு சீரான அரசியலைச் செய்ய முடியாத தலைவர்களாக இந்த நாட்டின் தலைவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறானவர்கள் எங்கள் மக்களைக் கவனிப்பார்களா என்ற கேள்வியே எழுகின்றது. அது மட்டுமல்லாது எமது தமிழ் மக்களை எவ்வாறு எல்லாம் நசுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் அவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன. இந்த அரசின் அனைத்து செயற்பாடுகளின் ஊடாகவும் பாதிக்கப்பட்டவர்களாக நாங்களே இருக்கின்றோம். எனவே இந்த அரசாங்கத்துக்கு இந்த நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஒரு நல்ல பாடத்தைப் புகட்ட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த உலர் உணவு வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பொத்துவில் பிரதேசசபை உப தவிசாளர் பார்தீபன் உட்பட பலரும் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.



# ஐந்து டிஜிற்றல் பூங்காக்களை அமைப்பதற்கு நாமல் திட்டம்

டிஜிற்றல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளுக்கு இளைஞர்களை உள்வாங்கும் நோக்கத்துடன் இலங்கையில் ஐந்து டிஜிற்றல் பூங்காக்களை நிர்மாணிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அதன்படி, காலி, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இந்தப் பூங்காக்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன மேம்பாடு இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐந்து டிஜிற்றல் பூங்காக்களில் முதலாவது பூங்காவை காலி மாவட்டத்தில் நிர்மாணிக்கும் ஆரம்ப நிகழ்வின் போது அமைச்சர் இந்தத் திட்டங்கள் தொடர்பாகத் தெரிவித்தார்.

இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் உதவியுடன் காலியில் முதல் டிஜிற்றல் பூங்கா நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் மீறல் 1,411 பேர் கைதாகினர்

நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 1,411 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளை கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப் பகுதியில் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இன்றும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

# உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## ஐக்கிய மக்கள் சக்தி முடிவு

எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய எரிபொருள் நிதியம் செயற்படவில்லை

## உதய கம்மன்பில கூறுகிறார்




எரிபொருள் விலையை உறுதிப் படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய எரிபொருள் நிதியம் செயற்படுத்தப்படவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை குறைந்துள்ளதால், அதன் மூலம் கிடைக்கின்ற பணத்தை மக்களுக்கு கொடுக்காமல், அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தை நிதியமொன்றுக்கு ஒதுக்குவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

மேலும் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்திலும், விலையை நிலையாகப் பேணுவதற்கும் இந்த நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே எரிபொருள் நிதியம் இன்னும் செயற்படுத்தப்படவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# கைக்குண்டு ஒன்று மீட்பு



கிரான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சந்தியாறு அம்பூஸ்குடா பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் ஜே.ஆர். ரக கைக்குண்டு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, வாழைச்சேனை காகித ஆலை பகுதியில் வாழைச்சேனை பொலிஸார் இந்தக் கைக்குண்டை மீட்டுள்ளனர்.

மேற்படி கைக்குண்டு கடந்த யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோய்க் கட்டுப்பாடு

வெவ்வேறு கலவையைப் (இரசாயனக் கலவை, சேதனக் கலவை) பயன்படுத்தி மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கான கள சோதனை 2017 இல் கிர்ப் எனுமிடத்தில் நடத்தப்பட்டது. பயன்படுத்தப்பட்ட கலவைகளில் இமிடாகுளோபிட்டினைப் பயன்படுத்தி செய்யப்பட்ட ஆய்வு பயனுடையதாகவும் திருப்திகரமானதாகவும் இருந்தது. 600 எப்.எஸ். பெறுமானத்தினைக் கொண்ட இமிடாகுளோபிட்டினை ஒரு கிலோவிற்கு 5 மில்லிலீற்றர் என்ற அளவில் விதைப் பரிகரணம் செய்யலாம். அதேபோல் 17.8 எஸ்.எல். பெறுமானத்தினைக் கொண்ட இமிடாகுளோபிட்டினை லீற்றருக்கு 0.55 மில்லிலீற்றர் என்ற அளவில் விதைத்து 15 நாள்களுக்கு பிறகு விதைத்து 30 நாள்களுக்கு பிறகு விதைத்து 45 நாள்களுக்கு பிறகு என மூன்று தடவைகளில் தெளிக்கலாம்.

இவ்வாறு விதைப்பரிகரணம் செய்யும் போதும் தெளிப்பானில் தெளிக்கும் போதும் தாவர வளர்ச்சி சிறப்பானதாகவும் உயர் விளைச்சலைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. ஆய்வுக்கு முன்னரான காலப் பகுதியில் பெறப்பட்ட தகவல்களின் படி 26.98 வீதம் நோய்தொற்று அபாயம் இருந்தது. பின்னர் அது இல்லாது குறைக்கப்பட்டது. அதேபோல் சித்திரவடிவ வைரஸ் நோயின் காவிகளான வெண்பூச்சிகளது எண்ணிக்கையானது குறைந்து போனது. தாவரம் ஒன்றுக்கு 6.86 வெண்பூச்சியிலிருந்து 1.86 பூச்சியாக குறைந்து போனது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# ஏழைகளின் கண்ணீரில் சவாரி செய்கிறது அரசு!

## சிறிதரன் எம்.பி. கடும் காட்டம்



எரிபொருள் விலையேற்றத்தினூடாக மக்களின் உணவிலும் வாழ்க்கையிலும் பாரிய அளவில் இந்த அரசாங்கம் கை வைத்திருக்கின்றது. மிகப் பெரிய அளவில் இந்த நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளுகின்ற வேலையை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை–பொத்துவில்பிரதேசத்தில்கொரோனா நிலைமையால் பாதிப்புற்ற வறிய குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் அன்றாடம் உழைத்து வாழும் மக்களின் பொருளாதார நலிவு நிலையைச் சமாளிக்கும் வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை உலர் உணவுப் பொதிகள் வழங்கும் செயற்பாட்டின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

பெற்றோல் விலையேற்றம் தொடர்பில் இன்று நாட்டில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ரணில் – மைத்திரி அரசு இருந்த போது குறிப்பிட் ஆறு, ஏழு ரூபா விலைச் சூத்திரத்தில் விலையேற்றம் இடம்பெற்றதைக் காரணம் காட்டி நாட்டின் இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சைக்கிளில் நாடாளுமன்றத்துக்கு வந்தார்.

ஆனால் இன்று அவர்களால் ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபா, டீசல் 12 ரூபா, மண்ணெண்ணெய் 7 ரூபா வரையும் விலையேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. மிகப் பெரிய அளவில் இந்த நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளுகின்ற வேலையை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.

மக்களின் உணவிலும் வாழ்க்கையிலும் பாரிய அளவில் இந்த அரசாங்கம் கை வைத்திருக்கின்றது. இந்த அரசாங்கம் மூழ்கும் நிலையிலுள்ள கப்பலுக்குச் சமமானதாகவே இருக்கின்றது.

அது மூழ்குகின்ற நிலையிலும் நீரோ மன்னன் பிடில் வாசித்ததைப் போன்று இந்த நாட்டின் தலைவர் ஏழைகளின் கண்ணீரிலே பிடில் வாசித்துக் கொண்டிருக்கின்றார். அதேபோல் அவரின் அரசாங்கம் ஏழைகளின் கண்ணீரில் சவாரி செய்து கொண்டிருக்கின்றது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று சிங்கள மக்கள் வெறுப்படைந்து போயிருக்கின்றார்கள்.

தங்களுடைய தெரிவும் இனவாத அடிப்படையில் அவர்கள் அளித்த வாக்கும் எவ்வளவு கேவலமான முடிவு என்று அவர்கள் நினைக்கும் அளவிற்கு இந்த அரசின் செயற்பாடுகள் அவர்களுடைய மன நிலைகளைப் புரிய வைத்திருக்கின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெட் ஸ்கை ஒபரேட்டர் பயிற்சி வழங்கும் திட்டம் முன்னெடுப்பு



இலங்கை கடலோர பாதுகாப்பு படை, கடலில் உயிர்காப்பு பணியில் ஈடுபடும் தமது வீரர்களுக்கு ஜெட் ஸ்கை ஒபரேட்டர் பயிற்சி வழங்கும் திட்டத்தை முன்னெடுத்தது.

கடலோரப் பாதுகாப்பு படையின் உயிர்காப்பு பணியில் ஈடுபடும் வீரர்களின் உயிர் காப்பு திறன் மற்றும் பிரயோக செயற்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றை மேம்படுத்தும் வகையில் இந்த பயிற்சித் திட்டம் கடலோர பாதுகாப்பு படையினரால் பலப்பிட்டிய பயிற்சி பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கமைய, இலங்கை கடற்படையின் ஜெட் ஸ்கை மற்றும் மோட்டார் ஸ்போர்ட் பூல் நிபுணர்கள் நடத்திய நிகழ்ச்சியில் 29 உயிர்காப்பு பணியில் ஈடுபடும் வீரர்கள் பங்கேற்றனர் என கடலோர பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

# ஒன்லைனில் மதுபானங்களைப் பெற அனுமதிக்கும் முன்மொழிவு சமர்ப்பிப்பு

ஒன்லைன் மூலம் மதுபானங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை நுகர்வோருக்கு வழங்கும் திட்டம் நிதியமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக காலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை காலால் திணைக்களத்தின் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

பல்பொருள் அங்காடிகளில் இருந்து ஒன்லைனில் மதுபானத்தை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்துள்ளனர்.

எனவே இந்த பரிந்துரைகள் ஏற்கனவே நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நகரசபை உறுப்பினர்கள் இருவர் கைது

திருட்டுச் சம்பவம் தொடர்பில் கொலன்னாவநகரசபைஉறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான மீதொட்டமுல்ல பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் இருந்த இயந்திரம் ஒன்றைத் திருடியமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

50 மற்றும் 52 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் இருவரும் கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

குறித்த இயந்திரத்தை கொள்வனவு செய்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# ஷானி மற்றும் சுகத் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜுன்.17

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபே சேகர மற்றும் சப் இன்ஸ்பெக்டர் சுகத் மெண்டிஸ் ஆகியோருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அதன்படி அவர்களை நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்குமாறு கம்பஹா மேல் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டது.

ஷானி அபேசேகர மற்றும் சுகத் மெண்டிஸ் உள்ளிட்ட மூவரும் போலி சாட்சியங்களை உருவாக்கிய குற்றச்சாட்டில், கடந்த வருடம் ஜுலை 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு காணாமலாக்கப்பட்டோரை தேடிய 92 உறவுகள் இதுவரை உயிரிழப்பு!



வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களை நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைதேடியலைந்துசொல்லெண்ணா துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப ஓய்வுக் காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடியலைந்த 92 உறவுகள் நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 12 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயணத் தடையால் வருமானம் இழந்த குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் உதவிக்கரம் நீட்டினார் விக்னேஸ்வரன்



நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடையால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நிவாரணம் வழங்கிவைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 11 மணி தொடக்கம் பாரதிபுரம், மலையாளபுரம், கோணாவில் கிழக்கு, செல்வாநகர், திருவையாறு, பரந்தன், பிரமந்தனாறு, கல்லாறு, சாந்தபுரம், அம்பாள் குளம் ஆகிய கிளிநொச்சி மாவட்டத்தில் பயணத் தடையால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த அடையாளப்படுத்தப்பட்ட உதவி தேவைப் படுவோர்க்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் அவர்களுடன் இணைந்து தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள் வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருள்களை வழங்கி வைத்தனர்.

குறித்த வாழ்வாதார உதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தனது தனிப்பட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபா வழங்கியதுடன், சிட்னி தமிழ் உறவுகள் சிலரும் நிதிப்பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 09 | கணிதம் | அலகு 10

1. 4:10, 12:30
2. 5:15, 3:9
3. 54:81, 2:3

2.1. 7:350
1:50
5:250
ரூ.250.00

2. 3:165
1:55
4:220
ரூ.220.00

3. 8:640
1:80
5:400
ரூ.400.00

4. 6:270
1:45
4:180
ரூ.180.00

4.1. 1. d = 5t
2. d = 5 x 12
d = 60m
3. 80 = 5x t
t = 80 / 5
t = 16s

2. 1. r = 150a
2. r = 150x9
r = ரூ.1350.00
3. 750 = 150x a
A = 750 / 150
A = 5kg

5. 1. 180 X 150 = ரூ.27000.00
2. 160 X 500 = ரூ. 80000.00
3. 50000 ÷ 2 = இந்திய ரூபா 25000.00
4. 750000 ÷ 1.5 = யென் 500000

காலைக்கதிர் Kalaikkathir

# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்



பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா சமாதியடைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு மே மாதம் பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற பௌத்த பூர்ணிமா கொண்டாட்டத்தின்போது பங்குபெறும் அருந் தருணம் எமக்குக் கிடைத்தமையை பெரும்பேறாகக் கருதுகிறோம்.

அந்நிகழ்ச்சியில் ஏனைய நாடுகளைச் சார்ந்த பல்லாயிரம் சாயி அன்பர்களுடன், புருணை, இந்தோனேஷியா, ஜப்பான், மலேசியா, நேபாளம், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளைச் சார்ந்த பௌத்த சாயிபக்தர்களும் பங்குபெற கண்டிய நடனம் போன்ற கலாசார நிகழ்வுகளுடன் விழாத் தொடங்கியது.

அன்றைய விழாவில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது இலங்கை சாயிசமித்தி இளைஞர்கள் அரங்கேற்றிய அங்குலிமாலா நாடகம். அங்குலிமாலா என்பவன் ஒரு பயங்கரவாதி. அவன் வருகின்றான் என்றால், கிராமத்தவர்கள் அச்சங்கொண்டு, தத்தம் சிறுவிரல்களைக் காப்பாற்ற வேண்டி அங்குமிங்கும் ஓடியொளிப்பர்.

தான் சந்தித்த 999 நபர்களின் வலதுகை சிறுவிரல்களை நறுக்கியெடுத்து, அவற்றை மாலையாகத் தொடுத்து தனது கழுத்தில் அணிந்துவிட்டு, ஆயிரமாவது நபரைத் தேடிக் கொண்டிருக்கின்றான். அவ்வேளைதான் புத்தபிரான் தீவிரவாதியான அங்குலிமாலாவைச் சந்திக்கின்றார். அவரது பார்வை அவனுக்குக் கிட்டியது.

புத்தரின் தரிசனம் கிடைத்ததும், புத்தரின் போதனைகளைச் செவிமடுத்ததும், பயங்கரவாத வெறி எங்கோ விரைந்து சென்று மறைந்தது. அவனது கையிலிருந்த வாள் கைநழுவிக் கீழே வீழ்ந்தது. கொடூரமுகத்தில் சாந்தம் பரவியது. மொட்டைத்தலை, கருணை பொழியும் கண்கள், காவியுடை ஆகியவை அவன் தற்போதைய புறத்தோற்றமானது. சாத்வீகம் அவனது வாழ்க்கை நெறியானது. அல்லவன் நல்லவனான். இந்தக் கதையே அந்நாடகத்தின் தொனி.


கதையின் உன்னத கருத்து, நடிகர்களின் நடிப்புத்திறன் எம்மைக் கவர்ந்தன. அங்குலிமாலாவாக நடித்த இளைஞன் காலியைச் சார்ந்த சிங்கள இளம்சாயி பக்தன் என்று எனக்கு ஞாபகம். அவனது முகப்பாவம், பேச்சுத்திறன், நடிப்புத்திறன் அனைவரையும் கவர்ந்தன. அங்கிருந்த சாயி அன்பர்களின் கரவொலி அவ்விளைஞனுக்குப் பாராட்டாக அமைந்தது.

பகவான் பாபாவையே இவ்விளைஞன் தனது நடிப்புத் திறனால் மட்டுமன்றி சாயி பக்தியாலும் கவர்ந்துவிட்டான். பெரும்பாலும் மேடைக்கு நடிகர்களை அழைத்து கௌரவிக்கும் பாபா, மேடைக்குக் கீழே நடிகர்களிடத்துத் தானமர்ந்திருந்த சக்கர நாற்காலியை நகர்த்துமாறு சேவாதாள்களைப் பணித்தார். அவர்களிடம் சென்றதும், அங்குலிமாலா கதாபாத்திரத்தை ஏற்று நடித்த இளைஞனை அருகில் அழைத்தார். ஏதோ கூறினார்.

தனது வலதுதிருக்கரத்தை அவனது தலை மீது உயர்த்தினார். பகவானின் உள்ளங் கையிலிருந்து ஒருதங்கச் சங்கிலி மெல்ல, மெல்ல உருவெடுத்தது. அதனை அவனது கழுத்தில் பகவான் அணிய, அவனிரு விழிகள் கண்ணீர் சொரிந்தன. அருகில் அமர்ந்திருந்த சிங்கள சாயி பக்தர்களான



அவனது பெற்றோர் இன்ப அதிர்ச்சியில் அழுதனர். பிரசாந்தி மண்டபத்தில் கூடியிருந்த சாயிபக்தர்கள் பக



வான் நடிகர்களை, கலைஞர்களைப் பாராட்டுவது கண்டு நெகிழ்ந்து போயினர்.

பௌத்தம், புத்தர் பற்றிய சிந்தனை எழுந்ததும், நீதியரசர் விக்னேஸ்வரன் திருகோணமலைசுவாமிகெங்காதரானந்தா நினைவுச்சொற்பொழிவு நிகழ்த்தியவேளை முன்வைத்த கருத்தினை இங்கு சிந்திப்பது பொருத்தம். இதோ அன்னார் தனக்குரிய, வாசகர்களை ஈர்க்கும் அருமையான தனிநடையில் தனது சிந்தனையை நமக்குத் தருகின்றார்.:



'அழகான இளைஞன். சகல அரசம்பத்துக்களும் அவனுக்கு இருந்தன. தந்தையார் அவனை வெளியுலக சேர்க்கையின்றிச் செல்லமாக வளர்க்கின்றார். ஒரு நாள் தேரில் பவனி வருகிறான் அந்த இளைஞன். ஒரு வயோதிப உருவம் தள்ளாடித் தள்ளாடிக் குனிந்து குனிந்து நடந்து செல்கிறது.

'தேர்ச் சாரதியே இதுவென்ன?' என்கின்றான் இளைஞன்.

'இதுதான் மூப்பு பிரபு' என்கிறான் தேர்ச்சாரதி.

'எல்லோருக்கும் மூப்பு வருமா?' இது இளைஞனின் கேள்வி.

'ஆம் சுவாமி' பதில்.

தேர் தொடர்ந்து செல்கிறது. நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் கஷ்டப்பட்டுப் பாதையில் செல்வது தெரிகிறது.

'இதுவென்ன?' இப்படிக் கேட்கின்றான் இளைஞன்.

'நோய் சுவாமி' இது தேர்ச்சாரதி.

'நோயும் மனிதர்கள் எல்லோருக்கும் பொதுவா?'

'ஆம் இளவரசரே'. தேர்தொடர்ந்து செல்கிறது.

'அதோ யாரையோ படுக்கவைத்துக் கொண்டு செல்கிறார்களே. அதுவென்ன? ஏன் கூடியிருப்பவர்கள் அழுகிறார்கள்?'....இது இளைஞன்.

'படுத்திருப்பவருக்கு உயிரில்லை. இறந்துவிட்டார்.' இதுதேர்ச் சாரதி.

'இறப்பு எல்லோருக்கும் வருமா?' இளைஞனின் சந்தேகம்.

'கட்டாயம் வரும், இளவரசரே' என்று உறுதிபடக் கூறினான் தேர்ச்சாரதி.

'சரி, தேரைத் திருப்பு அரண்மனைக்கு' இளைஞன் பணித்தான்.

அரண்மனைக்குச் சென்ற சித்தார்த்தனின் வாழ்க்கையில் ஆத்மயாத்திரை உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. திடீர் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. வயோதிபம், வியாதி, இறப்பு எல்லோரையும் வந்தடையும் என்றால்



இந்த வாழ்க்கையின் தத்துவம் என்ன? ஏன் நாங்கள் பிறக்கவேண்டும்? ஏன் நாம் வாழவேண்டும்? ஏன் நாங்கள் இறக்கவேண்டும்? நான் யார்? – இவ்வாறான தேடல்கள் அவரிடத்தே கொழுந்துவிட்டு எரிந்தன.

இவற்றுக்கு ஏழு வருடங்களின் பின்னர் பதில் கண்டு சித்தார்த்தன் புத்த பெருமான் ஆகிறார்.

# மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றம் பிரதமருக்கு டக்ளஸ் நன்றி பாராட்டு

திருகோணமலை மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்துக்கு பி.சி.ஆர். இயந்திரத்தின் அவசியம் தொடர்பாக, குறித்த மாவட்டத்தைச் சேர்ந்த சமூகத் தலைவர்களால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருடன் கலந்துரையாடியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பி.சி.ஆர். இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் பாதிப்புக்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பிரதேசங்



களுக்கான பி.சி.ஆர். இயந்திரங்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்துக்கும் ஒரு பி.சி.ஆர். இயந்திரம் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருகோணமலை மாவட்டத்தில் நிலவி வருகின்ற கொரோனா அச்சுறுத்தலையும், அந்த மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பையும் புரிந்து கொண்டு, பிரதமரால் திருகோணமலைக்கு ஒரு பி.சி.ஆர். இயந்திரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும், குறித்த மாவட்ட மக்களின் சார்பாக பிரதமருக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன் எனவும்.' குறிப்பிட்டுள்ளார்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 8** | **வர்க்கமூலம்** | **கணிதம் அலகு 9**


**சதுர எண்**

**சதுர எண்** என்பது எண் ஒன்றை அதே எண்ணால் பெருக்க வருவதால் உண்டாகும் எண்கள் ஆகும்.

உ+ம் :- $1 \times 1 = 1^2 = 1$
$2 \times 2 = 2^2 = 4$
$3 \times 3 = 3^2 = 9$ ........................................... $n \times n = n^2$

| சதுர எண்களை குறித்தல் | நிரைகளும் நிரல்களும் | எண்ணின் வர்க்கம் பெறப்பட்ட விதம் | எண்ணின் வர்க்கம் சுட்டியாக | எண்ணின் வர்க்கத்தின் பெறுமானம் |
|---|---|---|---|---|
| 1ம் உறுப்பு | 1 நிரை 1 நிரல் | 1X1 | $1^2$ | 1 |
| 2ம் உறுப்பு | 2 நிரை 2 நிரல் | 2X2 | $2^2$ | 4 |
| 3ம் உறுப்பு | 3 நிரை 3 நிரல் | 3X3 | $3^2$ | 9 |
| 4ம் உறுப்பு | 4 நிரை 4 நிரல் | 4X4 | $4^2$ | 16 |

உ +ம் :- $1 \times 1 = 1^2 = 1$
$2 \times 2 = 2^2 = 4$
$3 \times 3 = 3^2 = 9$
⋮
$n \times n = n^2$



4 — $2^2$ or $2 \times 2 = 4$
9 — $3^2$ or $3 \times 3 = 9$
16 — $4^2$ or $4 \times 4 = 16$
25 — $5^2$ or $5 \times 5 = 25$
36 — $6^2$ or $6 \times 6 = 36$

**நிறைவர்க்க எண்கள்** என்பது நேர்முழு எண் ஒன்றை அதே நேர்முழு எண்ணால் பெருக்கிப் பெறப்படும் எண்கள் ஆகும்.

1,2,3,4,................ என்னும் எண்களின் நிறைவர்க்க எண்கள் 1,4,9,16, .............. ஆகும்.

உ+ம் :- 6 இன் நிறைவர்க்க எண் யாது?
$6 \times 6 = 36$

01 . நிறைவர்க்க எண்களை காண்க. — செய்கைவழி

1. 5 = ................. X ...................... = ..................................
2. 6 = ................. X ...................... = ..................................
3. 7 = ................. X ...................... = ..................................
4. 8 = ................. X ..................... = .................................
5. 9 = ................. X ..................... = ..................................
6. 10 = ..................X ..................... = .................................
7. 11 = ..................X ..................... = ..................................
8. 12 = ............... X ...................... = .................................
9. 13 = ............... X ...................... = .................................
10. 14 = ............... X ...................... = .................................
11. 15 = ..................X ...................... = .................................
12. 16 = ..................X ..................... = .................................
13. 20 = ..................X ..................... = .................................
14. 25 = ..................X ..................... = .................................
15. 100 = .................. X ..................... = .................................

நிறைவர்க்க எண் ஒன்றின் ஒன்றினிடத்து இலக்கம் காணும் முறை

| எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிறைவர்க்க எண் | 1 | ...... | 9 | ...... | ...... | ....... | 49 | ....... | ....... | 100 |
| நிறைவர்க்க எண் ஒன்றின் ஒன்றினிடத்து இலக்கம் | ...... | 4 | ...... | 6 | ...... | ...... | ...... | 4 | ...... | 0 |

- ஒரு நிறைவர்க்கத்தின் ஒன்றினிடத்து இலக்கம் **1,4,5,6,9,0** என்னும் இலக்கங்களில் ஒன்றாக அமையும்.
- **2,3,7,8** என்னும் இலக்கங்கள் ஒரு போதும் நிறை எண் ஒன்றின் வர்க்கத்தின் இறுதி இலக்கமாக அமையாது.

உ +ம் : 832 ஒரு நிறைவர்க்க எண்ணா?
832 இல் ஒன்றினிடத்து இலக்கம் 2 ஆகும்.
ஓர் எண்ணின் ஒன்றினிடத்து இலக்கம் 2,3,7,8 எனில் அவ் எண் நிறைவர்க்க எண்ணாகாது. ஆகவே 832 ஒரு நிறைவர்க்க எண் இல்லை

02 நிறைவர்க்க எண்களை இனங்காணல்

1. 107 (X)
2. 121 ( )
3. 34 ( )
4. 68 ( )
5. 957 ( )
6. 45 ( )
7. 225 ( )
8. 144 ( )
9. 104 ( )
10. 196 ( )

- ஒரு நிறைவர்க்கத்தின் இலக்கம் ஒன்றினிடத்து **1,4,5,6,9, 0** என்னும் இலக்கங்களில் ஒன்றாக அமையும்.
- ஆனால் ஒன்றினிடத்து **1,4,5,6,9, 0** என்னும் இலக்கங்கள் அனைத்தும் நிறைவர்க்க எண்கள் ஆகாது

**ஒரு எண் நிறைவர்க்க எண்ணாகும் போது அதன் வர்க்கமூலம் காணுதல்**

- எண் ஒன்றின் வர்க்கமூலத்தைக் காட்டுவதற்கு $\sqrt{\ }$ என்னும் குறியீடு பயன்படுத்தப்படும்

4 இன் **நிறைவர்க்கம்** $4 \times 4 = 4^2 = 16$ எனில்
16 இன் **வர்க்கமூலம்** 4 ஆகும்.

7 இன் **நிறைவர்க்கம்** 49 எனில்
49 இன் **வர்க்கமூலம்** 7 ஆகும்.

இதற்கேற்ப,
16 இன் வர்க்கமூலம் $= \sqrt{16} = \sqrt{4^2} = 4$
36 இன் வர்க்கமூலம் $= \sqrt{36} = \sqrt{6^2} = 6$
100 இன் வர்க்கமூலம் $= \sqrt{100} = \sqrt{10^2} = 10$

**பயிற்சி 3**

1. 1 தொடக்கம் 100 வரையுள்ள சதுர எண்களை எழுதுக?
.................................................................................................................
2. நிறைவர்க்க எண்கள் என்றால் என்ன? முதல் 5 நிறைவர்க்க எண்களை எழுதுக?
.................................................................................................................
3. சதுர வடிவப் பலகையின் பக்கம் ஒன்றின் நீளம் 9cm எனில் அப் பலகையின் மேற்பரப்பின் எண்சார்ந்த பெறுமானம் நிறைவர்க்க எண்ணாகும் எனக் காட்டுக?
.................................................................................................................
4. 60 இற்கும் 120 இற்கும் இடையிலுள்ள நிறைவர்க்க எண்களை எழுதுக?
.................................................................................................................
5. ஒரு நிறைவர்க்கத்தின் ஒன்றினிடத்து இலக்கங்களாக அமையும் எண்களைத் தருக?
.................................................................................................................
6. 347 ஒரு நிறைவர்க்க எண்ணாகுமா? காரணம் தருக?
.................................................................................................................
7. 11 இன் நிறைவர்க்க எண் யாது?
.................................................................................................................
8. 64 இன் வர்க்கமூலத்தின் பெறுமானம் யாது?
.................................................................................................................
9. $\sqrt{144}$ இன் பெறுமானம் யாது?
.................................................................................................................
10. ஒரு சதுரவடிவப் பூப்பாத்தி ஒன்றின் பரப்பளவு 121 $m^2$ எனில் அப் பூப்பாத்தி ஒன்றின் ஒரு பக்க நீளத்தைக் காண்க?
.................................................................................................................

**முதன்மை காரணிகள் மூலம் நிறைவர்க்க எண்ணின் வர்க்கமூலம் காணுதல்**

- **முதன்மை எண்கள்** என்பது இரு காரணிகளை மட்டும் கொண்ட எண்கள் ஆகும். **முதன்மை எண்கள் :- 2, 3, 5, 7, 11, ...**

உ+ம் :- 36 இன் பெறுமானத்தை முதன்மை காரணிகள் மூலம் காணுதல்

முறை 1
$36 = 2 \times 2 \times 3 \times 3$
$= (2 \times 3) \times (2 \times 3)$
$= (2 \times 3)^2$
$= 6^2$
$\sqrt{36} = \sqrt{6^2}$
$= 6$

| | |
|---|---|
| 2 | 36 |
| 2 | 18 |
| 3 | 09 |
| 3 | 03 |
| | 01 |

முறை 2
$36 = 2 \times 2 \times 3 \times 3$
$= (2 \times 3) \times (2 \times 3)$
$= (2 \times 3)^2$
$\sqrt{36} = \sqrt{(2 \times 3)^2}$
$= 2 \times 3$
$= 6$

**பயிற்சி 4**

1. 1 இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட முதன்மை எண்களைத் தருக?
.................................................................................................................
2. 16 ஐ முதன்மை காரணிகளின் பெருக்கமாக எழுதிக் காட்டுக?
.................................................................................................................
3. பெறுமானம் காண்க?

1. $\sqrt{(2 \times 3 \times 5)^2}$ = .........................
2. $\sqrt{2 \times 2 \times 3 \times 3 \times 3}$ = .........................
3. $\sqrt{3 \times 3 \times 5}$ = .........................
4. $\sqrt{3 \times 3 \times 5 \times 5}$ = .........................

4. முதன்மை காரணிகள் மூலம் வர்க்கமூலத்தைக் காண்க.

1. $\sqrt{625}$ = .........................................
2. $\sqrt{900}$ = .........................................
3. $\sqrt{196}$ = .........................................
4. $\sqrt{400}$ = .........................................
5. $\sqrt{841}$ = .........................................
6. $\sqrt{361}$ = .........................................

5. $12^2 - 4^2 = (12+4)(12-4)$ உண்மை எனக் காட்டுக?
.................................................................................................................

**ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)**
**யா/செங்குந்த இந்துக் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

காலைக்கதிர்
Kalaikkathir

# மெல்லச் சாகின்றன மாகாண சபைகள்!

தெல்லியூர் சி.ஹரிகரன்

மாகாண சபைகளின் அதிகாரங்களை – மாகாண சபையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நேரத்தில் பார்த்து – ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியாகிய ஆளுநரைக்கொண்டு – தற்போது மாகாணத்துக்குரிய பதில் முதலமைச்சர், பதில் சுகாதார அமைச்சர், பதில் கல்வி அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களாக விளங்கும் ஆளுநரின் ஒப்புதலைக்கொண்டு – மெல்ல மெல்ல மாகாண அதிகாரங்கள் பறிக்கப்பட்டு, மாகாணசபை மெல்லெனச் சாவடையச் செய்கின்ற வேலையை கோட்டா அரசு கனகச்சிதமாகச் செய்கின்றது.



கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட – சுகாதார அமைச்சின் ஆளுகையின் கீழ் உள்ள – மாவட்டப் பொது வைத்தியசாலைகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகியவற்றை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவந்து இலங்கையில் தேசிய வைத்தியசாலைகளில் காணப்படும் மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கு சமமான வசதிகளை வழங்கி, தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்ற இடியாய் வீழ்ந்த இந்தச் செய்தியைப் பார்த்ததும் என்னால் இந்த ஆக்கம் எழுதத் தூண்டியது.

நாடு முழுவதும் உள்ள ஆயிரம் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாறுகின்றன. இதனால், பாதிக்கப்படுவது சிறுபான்மையினரைக்கொண்ட எமது பிரதேசமே. மாகாண சபைகள் அதுவும் 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் திகதி பாரதப் பிரதமர் ராஜிவ் காந்திக்கும் இலங்கையின் நிறைவேற்றுதிகாரம் மிக்க ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும்




பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழர் பிரதிநிதிகளைத் தவிர்த்து மாகாணசபை ஆட்சி முறைமை உருவாக்கப்பட்டது. அதுவும் வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபை தமிழர் பிரதேசத்தில் தமிழர்களுக்கு ஒரு தீர்வாக அமைந்தது. ஆனாலும், தமிழ் பிரதிநிதிகள் எவரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 1988 ஆம் ஆண்டு முறையான மக்கள் வாக்களிப்பின்றி இந்திய கைப்பொம்மையாகிய வரதராஜப்பெருமாள் அதன் முதலாவது முதலமைச்சராகினார். தெரிவாகினார் என்று கூற இயலாது அவர் முதலமைச்சராக இந்தியப் பிரதமரால் நியமிக்கப்பட்டார் என்று கூறுவதே பொருந்தும்.

ஆனால், பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் சர்வஜன வாக்கெடுப்பினூடாகவே மாகாண சபை அமைப்பில் மாற்றம் செய்யலாம் என்பதற்கு முரணாக, 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மக்கள் விடுதலை முன்னணி ஒருபகுதி மக்களுக்கு இந்த மாகாணசபை பாதிப்பை ஏற்படுத்துவதால் இது செல்லுபடியற்றது என உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் இரண்டு மாகாண சபைகளாக இது பிரிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் மாகாணசபை நிர்வாகத்தையோ 13 ஆவது திருத்தச் சட்டத்தையோ ஏற்காத தமிழர் தரப்பு, யுத்தம் மௌனித்ததன் பின்னர், தமிழ் மக்களின் அதிகாரங்களைப் பெறுவதற்கான ஆரம்பப் புள்ளியாக அதனைக் கருதினர். 13 ஆம் திருத்தத்தின்படி வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை வலியுறுத்தினர். ஆனால், தற்போது ஆட்சியிலிருக்கும் ராஜபக்ஷக்கள் அரசு, ஆட்சிக்கு வந்தவுடனேயே மாகாண ஆட்சி முறையை இல்லாமல் செய்ய தலையால் குத்திமுறிந் தது. இந்தியாவின் அழுத்தம் காரணமாக பின் அந்த நிலைப்பாட்டை மெல்லக் கைவிட்டு தற்போது மெல்லக் கொல்லும் வித்தையை மாகாண சபைக்குப் பருக்கியுள்ளது.

மாகாணநிர்வாகத்தின்கீழ்உள்ளஅமைச்சுக்களுள் சுகாதார அமைச்சும், கல்வி அமைச்சும்தான் பிரதானம் மிக்கவை. ஏற்கனவே உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபை நிறுவப்பட்ட காலம் தொட்டே வழங்கப்படவில்லை. தற்போது மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. முதலமைச்சருக்குக்கூட கட்டுப்படாத – மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதல்வரிலும் மிக்க அதிகார பலம் பொருந்திய – ஒரு நிறைவேற்று ஆளுநரை ஜனாதிபதி நியமித்துள்ளார். தற்போது முதல்வர், கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர் என சர்வ வல்லமைகளும் – பூரண அதிகாரங்களும் – ஜனாதிபதியின் கைப்பொம்மைகளான ஆளுநர்களிடத்தில்தான் உள்ளன. மாகாணசபை நிர்வாகம் இருந்தாலும் அவரை மக்கள் பிரதிநிதிகளால் கட்டுப்படுத்த முடியாது.

ஆளுநராலேயே மாகாணத்தின் பொதுச் சேவைகள் கட்டுப்படுத்தப்படும், மாகாண சபையை கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்கிறார், முதலமைச்சரின் ஆலோசனைகள் அல்லது அறிவுறுத்தல்களுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவரல்லர், ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியால் கட்டுப்படுத்தப்படக் கூடியது, ஆளுநரின் அனுமதி இன்றி மாகாண அரசாங்கம் மாகாண நிதியைக் கையாள முடியாது, பொலிஸ் மற்றும் பொது ஒழுங்கு தொடர்பான அதிகாரம் ஜனாதிபதியின் வசம் இருக்கிறது, அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் உள்ளது, ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

இது இவ்வாறிருக்க, பிரதான அமைச்சுக்களில் ஒன்றாகிய கல்வி அமைச்சின் சில அதிகாரமென்று கூறமுடியாது கல்வி அமைச்சையே மத்தி மெல்லக் கையகப்படுத்த ஆரம்பித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் எம்.பிக்கள் இதற்குப் பெரிதும் உதவுகின்றார்கள். அரசாங்கம் உள்வாங்கிய பாடசாலைகளை விட மேலும் 19 பாடசாலைகளை அதில் உள்வாங்கவேண்டும் என்று கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பி. இம்ரான் மஹ்ரூப் அரசை வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் பல பாடசாலைகள் ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒரு பாடசாலை என்று மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள விஞ்ஞான, கணிதப் பிரிவுகளை உள்ளடக்கிய 90 வீதமான 1 ஏபி பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்படுகின்றன. உதாரணத்துக்கு வலி.வடக்கு பிரதேசத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை தேசியப்பாடசாலையாகத் தரமுயர்த்த, அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சியைச் சேர்ந்த யாழ்.மாவட்ட எம்.பி. ஒருவர், 'இல்லை.... இல்லை..... அங்கு இன்னமும் இரண்டு தரமான பாடசாலைகள் உள்ளன அவற்றையும் தேசியப்பாடசாலை ஆக்குங்கள்' என்ற




முன்மொழிவை வழங்கியுள்ளார். இந்தத் திட்டத்தை ஆசிரியர் சங்கங்களும் எதிர்த்திருந்தன. இறுதியில் மாகாணக் கல்வி அமைச்சுக்குக் கிடைப்பது 1 சி பாடசாலைகள் மட்டுமே. இதனால், பல பாடசாலைகள் மூடப்படுகின்ற நிலைமை உருவாக உள்ளது என்று ஆசிரியர் சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எம்மை நாமே ஆளவேண்டும். எமக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று 30 வருட ஆயுதப் போராட்டமும் 30 வருட அஹிம்சைப் போராட்டமும் எதற்காக? எமது அதிகாரங்களை நாங்களே தங்கத் தாம்பாளத்தில் வைத்து மத்திய அரசிடம் ஒப்படைப்பதற்காகவா.....?

தற்போது சுகாதார அமைச்சில் கை வைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சையோ சுகாதார அமைச்சையோ நேரடியாக இல்லாமலாக்காமல், அதிகாரக் குவிப்பு கோரிய தமிழர்களுக்கு மெல்ல மெல்ல அதிகாரக் குறைப்புகள் இடம்பெறுகின்றன. மாகாண நிர்வாகத்தின் கீழ் சுகாதாரத் துறையில் மாகாணப் பொது வைத்தியசாலைகள், மாவட்டப் பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள் என்று உள்ளன. எமது வடக்கு மாகாணத்தில் மாகாணப் பொது வைத்தியசாலை எதுவும் இல்லை. மாவட்டப் பொது வைத்தியசாலைகளாக யாழ்.மாவட்டம் தவிர்ந்த 4 மாவட்டங்களான வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியன உள்ளன. தற்போது இந்த நான்கையும் மெல்ல மத்திக்கு எடுத்து இவற்றுடன் மாத்தளை, நாவலப்பிட்டி, எம்பிலிபிட்டி, அவிசாவளை, கம்பஹா ஆகிய வைத்தியசாலைகளையும் மத்தி கையகப்படுத்த உள்ளது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டும் விட்டது.

இதற்கு அரசு கூறும் பூச்சாண்டி, இலங்கையில் தேசிய வைத்தியசாலைகளில் காணப்படும் மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் ஆய்வுகூட வசதிகளுக்கு சமமான வசதிகளை வழங்கி அனைத்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பதாகும். வடக்கின் சுகாதாரத்துறையின் பிரதான வைத்தியசாலைகள் முழுமையாகப் பறிக்கப்பட்டுவிட்டன.

நான் கடந்தவாரம் எழுதிய ஓர் ஆக்கத்தில் யாழ். போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாகவும், வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை,




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை என்பன போதனா வைத்தியசாலைகளாகவும் உருவாக்கப்படவேண்டும் என்றேன். அதற்கான காரணம் இது எமது இந்த வைத்தியசாலைகள் மத்திக்கு சென்றாலும் எமது மக்களுக்கு அது பயனுள்ளதாக அமையும். வன்னிப் பல்கலைக்கழகம் தனிப் பல்கலைக்கழகமானதும் அனைவரும் மகிழ்ந்தனர். அரசியல்வாதிகள் கட்சிபேதமின்றி அதனை உருவாக்க உழைத்தனர். அதனைப் பயனுள்ளதாக மேலும் மாற்றுவதற்கு, வன்னிப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் உருவாக்கப்படவேண்டும். அதற்கு மேலும் மகுடம் வைப்பதற்கு வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலை ஆக்கப்படவேண்டும் என்றேன். காரணம், எமது வடக்கில் மருத்துவக் கல்வி சிறப்பாக உருவாக்கப்பட்டு மருத்துவத் துறை வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய், உளவளம் போதனா இடம்பெறுவதால் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு – அதன் வளர்ச்சிக்கு – மருத்துவத் துறையின் வடக்கு எழுச்சிக்கு – தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை போதனா வைத்தியசாலை ஆக உருவாகவேண்டும் என்றேன். அதனால் எமது மாகாணம் மருத்துவக் கல்வியில் உயர்வடையும். மக்கள் நன்மை அடைவர் என்பதற்காக அவ்வாறு தெரிவித்தேன்.

அதனைவிடுத்து, வெறுமனே சும்மா சத்திரசிகிச்சைக்கூடம், ஆய்வுகூடம் அமைப்பதைக் காரணங்காட்டி மத்தி எமது வளங்களைச் சுரண்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பாடசாலைகளுக்கு முன்னால் 'தேசிய' என்ற அடைமொழியில் எந்தப் பயனும் கிடையாது. அவ்வாறு இந்த வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டுமானால் மாகாணத்துக்கு விசேட நிதிகளை மத்தி ஒதுக்கி, அவற்றினூடாக அபிவிருத்தியைச் செய்யவேண்டும்.

இந்த விடயத்தில் எமது மக்கள் பிரதிநிதிகள் உஷாரடையவேண்டும். மெல்லக்கொல்லும் விஷத்தை அரசு எமது மாகாணத்துக்கு ஊட்டுகின்றது. இறுதியில் பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருந்த கோவணம் களவாடப்பட்ட நிலைமைதான் எமது வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஏற்படும் என்பது வெள்ளிடைமலை.

## பயணத் தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூறமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயணக் கட்டுப்பாடு என்பது இலங்கையில் வெறும் வார்த்தைக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டிருக்கின்றது. பயணக் கட்டுப்பாட்டை எந்தளவுக்குக் கடைபிடிக்கின்றோமோ அந்தளவுக்குக் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியமும் இருக்கின்றது.

பயணக் கட்டுப்பாடு என்ற வார்த்தையைப் பயன்படுத்தினாலும் மக்களின் நடமாட்டம் இன்னும் குறையவில்லை. மக்கள் வழங்க வேண்டிய ஒத்துழைப்பை சரிவர வழங்காவிட்டால் தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாட்டு முறை மேலும் நீடிக்கப்படலாம்.

எனவே, பயணக் கட்டுப்பாட்டை ஒரேடியாக தளர்த்தினால் மீண்டுமொரு அலை ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட பயங்கரமான கட்டத்தை நாம் கடந்துவிட்டோம் என்று எந்த அடிப்படையிலும் குறிப்பிட முடியாது.

ஏனெனில் சுகாதார அமைச்சின் தரவுகளின் அடிப்படையில் நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே, ஒரேடியாக வழமைக்கு திரும்பும் வகையில் பயணத் தடையை தளர்த்தக் கூடாது.

அவ்வாறு செய்தால் மீண்டும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து புதிய அலை உருவாகக்கூடும். எனவே, உரிய மீளாய்வுகளின் பின்னரே பயணத் தடை தளர்த்தப்பட வேண்டும் - என்றார்.

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கைக்கு மேலதிகமாக மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவராகவும் இவருடைய பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இவர் கம்போடியா, தாய்லாந்து, ஈராக், கொலம்பியா, வியட்நாம், ஜப்பான் மற்றும் சீனாவிற்கான அமெரிக்க தூதரகங்களில் பல்வேறு பொறுப்புகளில் கடமையாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரேரணையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எனக்கு எதிராக வெளியிட்ட அறிக்கையால் மக்களும், ஜனாதிபதி, பிரதமர், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆகியோரும் என் பக்கம் உள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது. எனவே, அவ்வாறானதொரு அறிக்கையை வெளியிட்டதற்காக சாகரவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

## ஒற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செயலாளர் பாலிதரங்கே பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, அரசையே முன்னெடுத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒன்றை 60 ஆக்குவதென்பது சவாலுக்குரிய விடயமாக அமையாது எனவும் அவர் மேலும் கூறினார்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ரணிலின் பெயரைப் பரிந்துரைப்பதற்கான ஆவணத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## ராஜபக்ஷ அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா நிலைமையால் பாதிப்புற்ற வறிய குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் அன்றாடம் உழைத்து வாழும் மக்களின் பொருளாதார நலிவு நிலைமையைச் சமாளிக்கும் வகையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் செயற்பாட்டின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோல் விலையேற்றம் தொடர்பில் இன்று நாட்டில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த ரணில் - மைத்திரி அரசு இருந்த போது குறிப்பிட்ட ஆறு, ஏழு ரூபா விலைச் சூத்திரத்தில் விலையேற்றம் இடம்பெற்றதைக் காரணம் காட்டி மஹிந்த ராஜபக்ஷ சைக்கிளில் நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஆனால், இன்று அவர்களால் ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபா, டீசல் 12 ரூபா, மண்ணெண்ணெய் 7 ரூபா வரை விலையேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

உலகத்திலே, ஆசியாவிலே ஏனைய நாடுகளை விட இங்குதான் பெற்றோல் விலை குறைவென்று அவர்கள் சொன்னாலும் அந்த நாடுகளில் இருக்கின்ற அரிசி, மா மற்றும் ஏனைய உணவுப் பொருள்களுடன் ஒப்பிடுகையில் நமது நாட்டில் அவற்றின் விலை அதிகமாக இருக்கின்றது. இங்கு எரிபொருளின் விலையேற்றம் என்பது தனியே எரிபொருளுக்கு மாத்திரமல்ல எரிபொருளைப் பயன்படுத்துகின்ற போக்குவரத்து தொடக்கம் உணவுத் தயாரிப்பு வரை விலை அதிகரிப்பு இடம்பெறும். தற்போது எரிவாயுவுக்கான விலையும் அதிகரிக்க இருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

எனவே, மக்களின் உணவிலும் வாழ்க்கையிலும் பாரிய அளவில் இந்த அரசு கை வைத்திருக்கின்றது. இந்த அரசானது மூழ்கும் நிலையிலுள்ள கப்பலுக்குச் சமமானதாகவே இருக்கின்றது. அது மூழ்குகின்ற நிலையிலும் நீரோ மன்னன் பிடில் வாசித்ததைப் போன்று இந்த நாட்டின் தலைவர் ஏழைகளின் கண்ணீரிலே பிடில் வாசித்துக் கொண்டிருக்கின்றார். அதே போல் அரசு ஏழைகளின் கண்ணீரில் சவாரி செய்து கொண்டிருக்கின்றது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று சிங்கள மக்கள் வெறுப்படைந்து போயிருக்கின்றார்கள். - என்றார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 215 ஆக அதிகரித்துள்ளது.

## அமைச்சர் கம்மன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்பது மக்களின் கட்சியாகும். இரகசியமாக செய்யமாட்டோம். செய்வதை வெளிப்படையாகவே செய்வோம் எனவும் அவர் கூறினார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பையடுத்து 'மொட்டு' கட்சியின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது அரசுக்குள்ளும் சலசலப்பை உருவாக்கியது.

இந்நிலையில் எரிபொருள்களின் விலை அதிகரிப்பானது அரசால் எடுக்கப்பட்ட கூட்டு முடிவாகும் என்ற அறிவிப்பும் வெளியானது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மீண்டும் சர்ச்சையைக் கிளம்பும் வகையில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார் சாகர.

## கட்டடத் தொழிலாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார்.

# குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களைத் தவறாக வழிநடத்தாதீர்கள்

## அமைச்சர் டக்ளஸ் கடும் சீற்றம்

(இ.கலையமுதன்)

கடலில் காவியம் படைப்போம் என்று ஓவியம் தீட்டி உசுப்பேற்றி எமது மக்களுக்குக் காடாத்தி செய்தவர்கள்தான், பஸ்களை கடலில் போட்டு கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக ஊளையிடுகின்றனர்.

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பாவனைக்கு உதவாத பஸ்களைக் கடலில் போடுகின்ற செயற்றிட்டம் தொடர்பில் சிலரினால் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான கடல் நீரடி பாறைகளுக்கு ஒத்த பொறிமுறையைச் செயற்கையாக உருவாக்கும் நோக்குடன், பாவனைக்கு உதவாத ரயில் பெட்டிகள், பஸ்கள், கப்பல்கள் மற்றும் கொங்கிறீற் துண்டங்கள் போன்றவற்றை கடலின் அடியில் போடுகின்ற செயற்பாடு சுமார் 40 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளில் நீண்டகாலமாகப் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

17ஆம் நூற்றாண்டில் இருந்து அமெரிக்காவில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜப்பான் போன்ற நாடுகளில் கடந்த 150 வருடங்களாக இந்தப் பொறிமுறையில் ஆர்வம் செலுத்தப்பட்டு வருகின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதைவிட, இந்தியாவின் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த பல ஆண்டுகளாக இவ்வாறான செயற்கை இனப்பெருக்கப் பொறிமுறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, கடந்த 2017 ஆண்டு சென்னை துறைமுகத்தில் இருந்து வெளியேறிய கப்பல் ஒன்று எண்ணெய் ராங்கருடன் மோதியமையால் ஏற்பட்ட எண்ணெய் பரவல் காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழந்தன.

இதனால் கடல் வளத்துக்கு ஏற்பட்ட பாதிப்பில் இருந்த விரைவாக மீள்வதற்குச் செயற்கையான கடல் நீரடிப் பாறைகளை உருவாக்கும் இதே பொறிமுறைதான் முன்மொழியப்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி, பாவனைக்கு உதவாத பஸ்களை கடலில் இறக்கும் வேலைத்திட்டத்தை எமது அரசு ஏற்கனவே, தென்லங்கையில் நடைமுறைப்படுத்தியுள்ளது. அதற்கு தென்னி லங்கையில் நல்ல வரவேற்பும் கிடைத் துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, வடக்கு கடல் பிரதேசத்தில் அத்துமீறி மேற்கொள்ளப்பட்ட தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளினாலும் ஏனைய சில கார ணங்களினாலும் கடல் வளம் குறைவடைந்து வருகின்றது எனவும், கடல் நீரடிப் பாறைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன எனவும் எமது கடற்றொழிலாளர்களினால் தொடர்ச்சியாக எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இதனை விஞ்ஞான ரீதியான ஆய்வு அறிக்கைகளும் உறுதிப்படுத்தியிருந்தன.

இந்நிலையிலேயே, தேவையான ஆய்வுகள் மூலம் பொருத்தமான இடங்கள் தெரிவு செய்து, குறித்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

ஆனால், சிலர் சுயநலன்களுக்காகவும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் இந்தச் செயற்றிட்டம் தொடர்பாகவும் கடந்த காலங்களைப் போன்றே தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்தி வருகின்றனர் - என்றார்.

# திருமலைக்குக் கிடைத்தது பி.சி.ஆர். இயந்திரம்!

கொழும்பு, ஜூன் 16

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் இரா.சம்பந்தனின் கோரிக்கையை ஏற்று அந்த மாவட்டத்துக்கு ஒரு பி.சி. ஆர். இயந்திரத்தை நேற்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

சில வைத்தியசாலைகளுக்கு பி.சி. ஆர். இயந்திரம் வழங்கும் வைபவம் இன்று முற்பகல் 11 மணிக்கு பிரதமரின் அலரிமாளிகை இல்லத்தில் நடைபெற்றது. அப்போதே திருகோணமலைக்கும் பி.சி.ஆர். இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதமர் தமக்குக் கீழ் இயங்கும் மக்கள் வங்கியின் 'பீப்பிள்ஸ் லீசிங்' நிறுவன



நன்கொடை மூலம் இதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தார்.

இந்த இயந்திரத்தை திருகோணமலைக்குப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை பிரதமரின் இணைப்புச் செயலாளரும், பிரதமரின் வடக்கு - கிழக்கு விவகார இணைப்பாளருமான காசிலிங்கம் கீதநாத் ஒருங்கிணைத்திருந்தார்.

# 78 இலங்கைத் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்

## தமிழக அரசை வலியுறுத்தி யாழில் உறவினர்கள் வீடுகளில் போராட்டம்



(இ.கலையமுதன்)

இந்தியா - தமிழ்நாடு, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற 78 இலங்கைத் தமிழர்களை விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் அவர்களது உறவினர்கள் தங்களது வீடுகளில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் போராட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ்., நவாலிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்களது உறவுகளை விடுதலை செய்யக் கோரி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த போராட்டம், தமது உறவுகளை விடுதலை செய்யும் வரை தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.